# தமிழ்த்துறை

# இளநிலைப் பட்டவகுப்பு

# பிறதுறை விருப்பப்பாடம்:

# தமிழ் இலக்கிய வரலாறு

**பாட ஆசிரியர்: மோ. செந்தில்குமார்**

**அலகு 3:**

## பாடப்பகுதி

1. தமிழில் நீதி நூல்கள்
2. தமிழில் காப்பியங்களும் புராணங்களும்
3. இரட்டைக் காப்பியங்கள் - பெயர்ப்பொருத்தம்
4. தமிழில் இலக்கண நூல்களின் எழுச்சி

9

# தமிழில் நீதி நூல்கள்

தமிழ்மொழி இலக்கிய வளஞ்செறிந்தது; இலக்கண நலம் மிக்கது. அவ்விலக்கியங்கள் அக்காலத் தமிழரின் சிறந்த வாழ்வியலை விளக்குவதோடு எக்கால மக்கட்கும் வாழும் நெறி காட்டுவனவாய் விளங்குகின்றன.

## அறநூல்களும் உணர்த்தும் முறையும்

தமிழ்ச்சான்றோர் பல நூல்களை ஓர் அமைப்பில் முறையாகத் தொகுத்துள்ளனர். பெரும்பாலும் நான்கடிக்குள் இயன்ற பாடல்களைக் கொண்ட பதினெட்டு நூல்களைத் தொகுத்து அத்தொகுப்புக்குப் 'பதினெண்கீழ்க்கணக்கு' என்று பெயரிட்டுள்ளனர்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இன்னின்ன என்பதை,

"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைச் சொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்ற வெண்பாவால் அறிகிறோம்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களை அவற்றின் அமைப்பு கருதி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்துள்ளனர். இந்நூல்களை மாணவர்கள் எளிதில் நினைவில் நிறுத்துவதற்கு அம்முறை பயன்படுமெனக் கருதி அப்பகுப்பு முறையும் கீழே கொடுக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| ஒரு | (1) மறை | : | திருக்குறள் |
| இரு | (2) நானூறு | : | நாலடியார், பழமொழி |
| மும் | (3) மருந்து | : | திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி |

Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| நா | (4) நாற்பது | : | இனியவை நாற்பது, இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது |
| ஐ | (5) ஐந்திணை | : | ஐந்திணை ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை. |
| | (6) மணிமொழிக்கோவை | : | நான்மணிக்கடிகை, முதுமொழிக் காஞ்சி, ஆசாரக் கோவை. |

பாடல்களின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை அறநூல்கள், அக நூல்கள், புற நூல் என வகைப் படுத்தலாம்.

திருக்குறளும் நாலடியாரும் உறுதிப்பொருள்களைப் பால், இயல், அதிகாரங்களாக வகுத்துக் கூறுகின்றன; இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக் காஞ்சி என்ற மூன்றும் இன்னாமை முதலிய இயல்பு நோக்கிச் செய்யுட் பொருள்களைப் பகுத்து உரைக்கின்றன; பழமொழி, முற்காலத்துத் தமிழ்நாட்டில் வழங்கிய பழமொழிகள் பலவற்றைச் செய்யுட்களின் ஈற்றில் வைத்து அவற்றை உதாரணம் முதலியவற்றால் விளக்குகிறது. நான்மணிக்கடிகை, அறியவேண்டிய உறுதிப் பொருள்களில் நான்கினை ஒவ்வொரு செய்யுளிலும் அமைத்துத் தெரிவிக்கின்றது. ஆசாரக்கோவை, கையாள வேண்டிய ஆசாரங்களைத் தொகுத்து உணர்த்துகின்றது. திரிகடுகம் , சிறுபஞ்சமூலம், ஏலாதி இவை மூன்றும் நோய்நீக்கி உடல்நலம் பேணும் மருந்துச் சரக்கின் பெயர்களைக் கொண்டு உயிர்க்கு நலமாய பொருள்களை முறையே மூன்று ஐந்து, ஐந்தின் மேற்பட்டனவாக அமைத்து மொழிகின்றன.

## பதினெண்கீழ்க்கணக்கில் நீதி நூல்கள்

### 1. திருக்குறள்

இன்றைய தமிழகத்தில் திருக்குறளைப் பற்றி அறியாத் தமிழர் இல்லை எனலாம். தமிழ்மொழியில் ஒப்புயர்வற்ற இந்நூல் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. திருவள்ளுவருக்கு நாயனார், தேவர், முதற் பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப் போதர், பெரு நாவலர் எனப் பல பெயர்கள் உண்டு.

Scanned by CamScanner

திருவள்ளுவரின் காலத்தைப் பற்றித் தமிழறிஞர்களிடத்ததுப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. திருவள்ளுவரின் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு என்றும் கி.பி. முதலிரு நூற்றாண்டாக இருக்கலாம் என்றும், கி.பி. ஆறாம் நூற்றாண்டு என்றும் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. திருவள்ளுவரைப் பற்றிய பல்வேறு கதைகளும் உலவுகின்றன. இவர் ஆதி என்றபுலைச்சிக்கும், பகவன் என்ற பார்ப்பனருக்கும் பிறந்தவர் என்றும் சென்னையில் உள்ள மயிலையில் பிறந்து மதுரை வந்து சங்கப் புலவர்களின் செருக்கை அடக்கினார் என்றும் அவர் மனைவி வாசுகி என்றும் விநோதரச மஞ்சரிக் கதை விளம்புகின்றது. இவரைப் பற்றிச் செவிவழிக் கதைகளும் பல உள. அக்கதைகள் யாவும் எவ்விதச் சான்றுகளாலும் நிறுவப்படாதனவாகும். இவரைப் பெருமைப் படுத்துவதற்காகத் தோன்றிய கதைகளே அவை.

### திருக்குறள் அமைப்பு

திருக்குறள் 1330 குறட்பாக்களைக் கொண்ட நூல். இது பத்துப் பத்துக் குறள் அடங்கிய 133 அதிகாரங்களைக் கொண்டது. இது அறம், பொருள், காமம் என்ற மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அறத்துப்பாலில், 38, பொருட்பாலில் 70, காமத்துப்பாலில் 25 என அதிகாரங்கள் உள்ளன. திருக்குறள், நாடு, இனம், மொழி, சமயம் என்பனவற்றை எல்லாம் கடந்து மக்களாய்ப் பிறந்த எல்லாருக்கும் எக்காலத்திற்கும் பொருத்தமான நீதிகளைக் கூறுகிறது என்னும் கருத்தினை நூலின் செய்தியாகக் கொள்ளலாம்.

### அறத்துப்பால்

அறத்துப்பாலில் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்ற நான்கு அதிகாரங்கள் பாயிரமாக விளங்குகின்றன. 38 அதிகாரங்களில் அமைந்துள்ள அறத்துப்பால், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்ற முப்பாகுபாடுகளைக் கொண்டுள்ளது.

அன்பே பண்பாகவும், அறமே பயனாகவும் திகழ்வது இல்லறம் என்றும் அதில் அன்புடைமையின் சிறப்பை நேர்முகமாகவும், எதிர் முகமாகவும் கூறி, விருந்தோம்பல், ஒப்புரவறிதல், ஈகை போன்ற அறங்களையும் எடுத்துரைக்கின்றார். அருளே பண்பாகவும், வீடுபேறே பயனாகவும் விளங்குவது துறவறம் என்றும், அதில் அருளுடைமையின் சிறப்பை நேர்முகமாகவும் எதிர்முகமாகவும் விளக்கி, அருளுடைமை, மெய்யுணர்வு, அவாவின்மை, தவம், துறவு போன்ற பண்புகளை விரித்

Scanned by CamScanner

துரைக்கின்றார். துறவியாரின் போலித் தோற்றத்தையும் அதற்கேற்ற புறவொழுக்கத்தையும் கடிந்துள்ளார்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்" (280)

இறுதியாக ஊழின் இயல்பை வற்புறுத்துகிறார். இப்பாலில் வள்ளுவரின் உயர்ந்த துறவுள்ளத்தையும் அன்புள்ளத்தையும் காணலாம்.

பொருட்பால்

எழுபது அதிகாரங்களைக் கொண்ட பொருட்பாலில், அரசியல் அமைச்சியல், அரணியல், பொருளியல், படையியல், நட்பியல், குடியியல் என ஏழு பகுதிகள் காணப்படுகின்றன.

மன்னனுக்கும் மன்னுயிருக்கும் வேண்டப்படுவனவாகிய கல்வி, கேள்வி, பகுத்தறிவு, குற்ற நீக்கம், நல்லாரிணக்கம், சிற்றினஞ்சேராமை, இடமும் காலமும் அறிந்து சோர்வற்றுச் செயலாற்றல் ஆகியனவும், அரசர்க்கே சிறக்குஞ் செங்கோண்மை ஒற்றாடல் ஆகியனவும் அரசியலில் கூறப்படுகின்றன.

அடுத்து அமைந்துள்ள அமைச்சியலில் பத்து அதிகாரங்களில் அமைச்சரின் இயல்புகள், அமைச்சர் மேற்கொள்ளவேண்டிய சொல் வன்மை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினையாற்றும் முறை, தூது, மன்னரைச் சார்ந்தொழுகல், குறிப்பறிதல், அவையறிதல், அவை அஞ் சாமை ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். அரணியல், நாட்டின் இயல்பு, நாட்டிற்குரிய அரண்களாக அமையும் நீர், நிலம், மதில் முதலிய இயற்கை அரண்களின் இயல்புகளை விரித்துரைக்கின்றது. சான்று.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு" (734)

"மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்" (742)

பொருளியலில் பொருளின் இன்றியமையாமையும், அப் பொருளை மன்னர் ஈட்டும் வகையும் கூறப்படுகின்றன. இதனை,

"உறுபொருளும் உல்கு பொருளும் தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்" (756)

என்பதால் அறியலாம்.

Scanned by CamScanner

படையியலில், படைமாட்சி, படைச்செருக்கு என இரு திறங்கள் உள்ளன. படைமாட்சியில் மன்னனுக்குப் படையின் இன்றியமை யாமையையும், படைகளின் பண்புகளும் கூறப்படுகின்றன. படை மறவரின் வீரம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது படைச்செருக்கு என்னும் திறத்தில் கூறப்படுகிறது.

அடுத்து அமைந்த நட்பியலில் நட்பின் இலக்கணம், நட்பாயும் முறை, நட்பு கொள்ளும் முறை, பேதைமை அறிவின்மை, பகைதெரிந்து செயல்படல் போன்ற வாழ்வியலுக்கு உரிய பற்பல நற்கருத்துக்கள் கூறப்படுகின்றன.

குடியியலில் உடலோம்பல் முறைகள், உயர் பழக்கங்களைக் கொள்ளுதல், உயர் பண்பைப் பெறுதல், உலகோடு ஒத்து வாழ்தல் போன்றவை கூறப்படுகின்றன. இவ்வியலுள் அமைந்த உழவு என்னும் அதிகாரம் தனிச்சிறப்புடையது.

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லாள் நகும்" (1040)

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்" (130)

என்ற பாக்களில் உழவே உலகை உய்க்கும் என்பதும், உழவுத் தொழில் செய்வாரே உயர்ந்தவர் என்பதும் கூறப்படுகின்றன. இவ்வியலில் அமைந்த இரவச்சம் என்னும் பகுதியுள் இக்காலப் பொதுவுடைமைக் கருத்துக்களைக் காணலாம்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (1062)

இரந்துதான் உயிர் வாழ வேண்டும் என்ற நிலையிருப்பின் இவ்வுலகை ஆள்பவன் கெட்டழியட்டும் என்று வள்ளுவர் சினம் கொள்வது கொடுங்கோலனுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து உருவாக்கிய புரட்சிகளை நினைவூட்டுகிறது.

**இன்பத்துப்பால்**

காமத்துப்பாலைக் களவியல் கற்பியல் என இரு பிரிவுகளாக அமைத்துப் பண்டைத் தமிழர் காதல் வாழ்வைக் கைவிடாமல் கற்பனைச் சிறப்போடும், கலைநுட்பத்தோடும் 25 அதிகாரங்களில் விளக்கி யுள்ளார்.

Scanned by CamScanner

"கூற்றமோ? கண்ணோ? பிணையோ? மடவரல்
நோக்கம் இம்மூன்றும் உடைத்து" (1085)

என்பதால், காதலியின் காட்சியில் கலக்கமுற்ற காதலன் நிலையை அறிகிறோம்.

"கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள" (1101)

தலைவன் தலைவியிடம் கூடிப்பெற்ற இன்ப நுகர்வை இப்பாடலில் உணர்கிறோம்.

"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை" (1151)

"வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்" (1179)

என்ற பாக்களில் காதல் தலைவியின் துயர நிலையைக் காணலாம்.

## திருக்குறட் சிறப்பு

தமிழ்மொழியில் முதலெழுத்து அ, இறுதி எழுத்து 'ன்', திருக்குறளில்,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (1)

என 'அ' வில் தொடங்கி

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். (1330)

என 'ன்' இல் நிறைவுறுவது அந்நூலின் அமைப்பு முறையின் தனிச் சிறப்பாகும்.

இந்நூல் திருக்குறள், முப்பால், உத்திரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, பொதுமறை, திருவள்ளுவப் பயன் என்ற பல பெயர்களால் வழங்கப்படுகிறது.

இப்பெருநூலுக்குத் தருமர், மணக்குடவர், தத்தர், நச்சர், பரிமேலழகர், திருமலையர், வல்லர், கலிப்பெருமாள், காளிங்கர் ஆகியோர் உரை கண்டுள்ளனர். இந்நூல் கி.பி.4ஆம் நூற்றாண்டிலேயே கிரேக்கத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்நாளில் இந்நூல் நாற்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் மட்டும் ஐம்பதிற்கும் மேற்பட்ட மொழி பெயர்ப்புகள் உள்ளன.

Scanned by CamScanner

திருக்குறளுக்கு ஓர் ஆய்வு நூல் எனக் கருதத்தக்க அளவில் திருவள்ளுவமாலை என்ற நூல் தோன்றி உள்ளமை இந்நூலின் பெருமைக்கொரு சான்றாகும். திருவள்ளுவமாலை 53 புலவர் பாராட்டிய பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூலாகும்.

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

என ஔவையார் புகழ்ந்துள்ளார்.

திருவள்ளுவரின் ஆழ்ந்த அறிவும்; முதிர்ந்த உலகியல் அனுபவமும், தெளிந்த சிந்தனையும் கூர்த்த மதியும் அவர் ஆக்கிய திருக்குறள்பால் வெளிப்படுகின்றன. இவர் கூறிய கருத்துக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதால் இதனைப் பொதுமறை என அறிஞர்கள் போற்றினர். இப்பெருமையை நோக்கியே பாரதியும்,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று பெருமிதம் கொள்கிறார். திருக்குறள் கருத்துக்களையும் தொடர்களையும், சங்கப் புலவர்களும் பிற்காலத்தில் வாழ்ந்த சமயப் புலவர்களும் தமது படைப்புகளில் கையாண்டுள்ளனர்.

திருக்குறள் ஓர் அறநூல் எனக் கொள்ளப்பட்டாலும், இலக்கியப் பண்புகள் அனைத்தும் இதில் அடங்கியுள்ளன. கலையழகு, குறிப்புப் பொருட்செறிவு, நிலைபேறுடைமை, நடை ஆகிய இலக்கியப் பண்புகளை இதனுள் காணலாம். பல்வேறு அணிகள் இந்நூலுக்குக் கலையழகைத் தருகின்றன.

சொல்லப்படும் முறையால் குறிப்புப் பொருட்செறிவுப் பண்பை இந்நூலில் காண்கிறோம்.

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்குஇறுதி யாகி விடும். (476)

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். (475)

போன்ற பாடல்கள் பிறிது மொழிதல் அணி கொண்டு குறிப்புப் பொருட் செறிவு பெற்றுத் திகழ்கின்றன.

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற. (34)

Scanned by CamScanner

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. (236)

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (616)

என்பன போன்ற பல பாக்கள் திருக்குறள் நிலைபெற்ற கருத்துக் கருவூலமாகத் திகழ்கிறது என்பதற்குச் சான்றுகளாகும். திருக்குறள் போன்றதொரு சிறந்த நூல் இதுவரை தோன்றவில்லை என்ற மாபெரும் பெருமைக்குரியது இந்நூல்.

## 2. நாலடியார்

உலகப் பொதுமறையாம் திருக்குறளுக்கு அடுத்த நிலையில் உள்ள அறநூல் நாலடியார். நாலடி நானூறு என்ற பெயரும் இதற்கு உண்டு. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாற் பிரிவால் நானூறு வெண் பாக்களைக் கொண்டது இந்நூல். இந்நூலுக்குப் பால் இயல் அதிகாரங் களைப் பதுமனார் என்னும் புலவர் வகுத்துள்ளார்.

புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பே இந்நூல் என்று ஒரு சாரரும், புலவர் ஒருரால் இயற்றப்பட்டது என மற்றொரு சாராரும் கூறுவர்.

8000 சமண முனிவர்கள் பாடிய பாடல்கள் இவை என்றும் பாண்டிய மன்னன் உக்கிரப் பெருவழுதி ஆணையால் வைகையாற்றில் அவை இடப்பட்ட பொழுது நானூறு மட்டும் நீரோட்டத்தை எதிர்த்துக் கரையேறின என்றும் ஒரு கதையாகவும் வழங்கப்படுகிறது.

இந்நூலில் காணப்படும் சொற்களின் தன்மைகளாலும், வட சொற்கள் மிகுதியாகக் காணப்படுவதாலும், சமணச் சார்புடைய கருத்து களே இடம் பெறுவதாலும் இந்நூல் கி.பி. 300க்குப் பிற்பட்டதாகும் என அறிஞர்கள் கருதுகின்றனர். பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்கள் இந்நூற் கருத்துக்களை மேற்கோள் காட்டுவதாலும் இந்நூலின் காலம் கி.பி.8ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகும். எனவே நாலடியார் கி.பி.300 - கி.பி. 800 என்ற கால இடைவெளியில் தோன்றியிருக்க வேண்டும். நாலடியாரும் திருக்குறளைப் போன்றே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பெரும் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

6

Scanned by CamScanner

இயல் பாகுபாட்டில் குறளுக்கும் நாலடியாருக்கும் இடையே வேறு பாடுகள் பல உள. குறளில் பாயிரத்துள் கூறப்பட்ட அறன் வலியுறுத்தல் கருத்துக்கள் நாலடியாரில் துறவறவியலில் சேர்க்கப்பட்டுள்ளன. குறளில் இல்லறவியலில் அமைந்த வாழ்க்கைத் துணை நலம் நாலடியாரில் கற்புடை மகளிர் எனக் காமத்துப்பாலில் சேர்க்கப்பட்டுள்ளது. இவ் வாறான பல மாற்றங்களை நாலடியாருள் காணலாம்.

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"

"பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்"

என்ற மொழிகளில் நாலடியார் திருக்குறளோடு வைத்துப் புகழப் படுவதைக் காணலாம். சிறந்த உவமைகளாலும், சீரிய சொற்களாலும், பழமொழிகள் வாயிலாகவும் வாழ்வியலைச் சீராக்க கருத்துக்களைச் சொல்வதில் நாலடியார் சிறந்து விளங்குகிறது.

"யானை அனையவர் நண்புஒரீஇ நாய்அனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்." (223)

என்னும் பாடலில் ஆராய்ந்து நட்புகொள்ள வேண்டிய பாங்கினை உரைக்கிறார்.

செல்வர்களை, அவர்கள் ஈயாதார்களாய் இருப்பினும் அவர்களைச் சுற்றிச் சுற்றி மக்கள் வட்டமிடுவர் என்னும் உலகின் பேதைமையை,

"ஆகாது எனினும் அகத்துநெய் உண்டாகின்
போகாது எறும்பு புறஞ்சுற்றும் யாதுங்
கொடாஅ ரெனினும் உடையாரைப் பற்றி
விடாஅர் உலகத் தவர்." (337)

என்னும் செய்யுளால் விளங்கக் காணலாம். பழமொழிகளும் நாலடி யாரில் உள்ளன. பொருள் விளக்கத்திற்குப் பழமொழிகள் எடுத்தாளப் படுவது இந்நூலுக்குரிய இன்னொரு சிறப்பாகும்.

"கைக்குமாம் தேவரே தின்னினும் வேம்பு" (112)

"அரிமா கொடிப்புல் கறிக்குமோ" (141)

"ஒருவர் பொறை இருவர் நட்பு" (223)

போன்ற பல பழமொழிகளை நாலடியாருள் காணலாம்.

Scanned by CamScanner

## 3. பழமொழி நானூறு

ஒவ்வொரு பாடல் இறுதியிலும் ஒரு பழமொழியைக் கொண்டு ஓர் அறக்கருத்தை வெளியிடும் வெண்பாக்களால் ஆனது பழமொழி நானூறு. இந்நூலின் ஆசிரியர் முன்றுரை அரையனார். அரையர் மரபினர் எனக் கருத இடமுண்டு. முன்றுரை என்பது ஓர் ஊரின் பெயர். இவர் முன்றுரை என்னும் ஊரில் வாழ்ந்த குறுநில மன்னராகலாம். 'பிண்டியின் நீழற் பெருமானடி வணங்கி' என்னும் பாயிரப் பாடல் அடிகளால் இந்நூலாசிரியர் சமண சமயத்தவர் என அறியலாம். இந்நூலாசிரியரின் காலம் களப்பிரர் ஆட்சி காலமாகும் என்பது அறிஞர்களின் முடிவு. இந்நூல் தற்சிறப்புப் பாயிரம், கடவுள் வாழ்த்து உட்பட, நானூற்றொரு வெண்பாக்களையுடையது.

இந்நூலில் திருக்குறள், நாலடியார் போன்று பால், இயல் பகுப்புகள் இடம் பெறவில்லை. 34 அதிகாரங்களில் அறக்கருத்துக்கள் கூறப்படுகின்றன.

ஒவ்வொரு வெண்பாவிலும் ஆசிரியர் முதலிரண்டடிகளில் தாம் கூறக் கருதிய பொருளைக் கூறுவார். மூன்றாமடி பெரும்பாலும் ஆடூஉ முன்னிலையாய், சிறுபான்மை மகடூஉ முன்னிலையாய் அமையும். நான்காம் அடி பழமொழியைக் கொண்டு முடியும். இதனுள் கூறப்படும் பழமொழிகள் யாவும் இலக்கியப் பழமொழிகளே. அவை எதுகை, மோனை முதலியன பற்றித் திரிந்தும் மாறியும் காணப்படுகின்றன.

இந்நூலின்கண் திருக்குறள், நாலடியார் ஆகியவற்றின் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. சங்ககாலப் புலவர், புரவலர் பற்றிய செய்திகளும் சேர சோழ பாண்டிய மன்னர்களைப் பற்றிய குறிப்புகளும் புராண இதிகாசக் கதை நிகழ்ச்சிகளும் இந்நூலில் காணப்படுவதால் இதனை அக்காலத் தமிழர் பண்பாட்டினை அறிந்து கொள்ள உதவும் சான்றாகக் கொள்ளலாம்.

> "எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
> தமக்குத் துணையாவார் தாந்தெரிதல் வேண்டா
> பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ மற்றில்லை
> தமக்கு மருத்துவர் தாம்" (149)

எனும் சான்று பாடலில் தன்கையே தனக்குதவி என்ற மொழிபோல் தமக்கு மருத்துவர் தாம் என்ற மொழியால் முயற்சியின் தன்மைபற்றி விளக்கப்படுகிறது இவையன்றி,

Scanned by CamScanner

'திங்களை நாய் குரைத்தற்று'

'பாம்பறியும் பாம்பின் கால்'

'ஆயிரம் காக்கைக் கோர்கல்'

'முள்ளினால் முள் களையுமாறு'

'இறைத் தோறும் ஊறுங்கிணறு'

போன்ற இக்காலத்தே பெரு வழக்கமாயுள்ள பழமொழிகளையும் இந்நூலின் கண் காணலாம்.

### 4. திரிகடுகம்

கடுகம் என்னும் சொல், உறைப்பு, கார்ப்பு என்று பொருள்படும். கடுக்கும் பொருளாகிய சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்று பொருள் களைச் சேர்த்துச் செய்யும் மருந்திற்குத் திரிகடுகம் என்றும் பெயர் வழங்கப்படும். எவ்வாறு இம்மூன்று பொருள்களும் சேர்ந்த மருந்து உடலுக்கு நன்மை செய்கிறதோ அவ்வாறு இந்நூலில் கூறப்படும் மூன்று நெறிகள் வாழ்விற்கு நன்மை பயப்பனவாக உள்ளதால் இந்நூலுக்குத் திரிகடுகம் என்று பெயர் கொடுக்கப்பட்டது.

இந்நூலின் ஆசிரியர் நல்லாதனார். இவர் சங்ககால நல்லாதனாரின் மாறுபட்டவர் என்று கொள்வர். இவர் தென்பாண்டி நாட்டைச் சார்ந்த ஆதனூர் என்னும் ஊரினராதல் வேண்டும் எனப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கருதுகிறார். இந்நூலாசிரியரின் காலம் கி.பி.5ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம்.

திரிகடுகத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல். திருமால் திருவடிகளால் ஞாலம் அளந்தமை, குருந்தம் சாய்த்தமை, சகடம் உதைத்தமை ஆகியவற்றைக் கூறுவதால் இந்நூலாசிரியர் வைணவ மதத்தவராதல் வேண்டும். திரிகடுகம் கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்றுடன் 101 வெண்பாக்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலிலும் வாழ்விற்கு உறுதி பயக்கும் மூன்று அறிவுரைகள் கூறப்படுகின்றன.

இல்வாழ்க்கை நெறிகள். பெண்ணின் பெருமை ஆகியன மிகுதியாக இந்நூலில் கூறப்படுகின்றன. இவர் கூறும் பல நெறிகள் திருவள்ளுவரால் கூறப்பட்டன.

"தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்த லினிது." (12)

Scanned by CamScanner

என்ற பாடலில் வாழ்வில் நட்பாகக் கொள்ளத்தக்க மூவரைப் பற்றி குறிப்பிடுவதோடு தாளாளன், வேளாளன், கோளாளன் என்று மூவரின் இலக்கணத்தையும் தருவது மனங்கொளத் தக்கது.

'நல்லவை செய்வாள்
பெய்யெனப் பெய்யும் மழை.' (96)

'மக்கட் பெறலின் மனைக் கிழத்தி' (64)

'பெண்ணிற்கு அணிகலன் நாணுடைமை' (52)

போன்ற அடிகள் பெண்ணின் பெருமையைக் கூறுவதைக் காணலாம். சுருங்கக்கூறின் திரிகடுகம் உலகில் சிறப்புற்று வாழ்வதற்குக் கைக் கொள்ள வேண்டிய செயல்கள், தவிர்க்கப்படவேண்டிய செயல்கள் ஆகியன பற்றியும் வீடுபேறு அடைவதற்காகக் கொள்ள வேண்டிய வழிமுறைகளையும் கூறுகின்றது.

## 5. சிறுபஞ்சமூலம்

உயிர்களுக்குறுதி பயக்கும் ஐந்து பொருள்களை ஒவ்வொரு வெண்பாவிலும் கூறும் நூல் இது. கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்கள் சேர்த்துச் செய்யப்பட்ட மருந்து சிறுபஞ்ச மூலமாகும். உடலுக்கு உற்ற மிக்க நோயைச் சிறுபஞ்சமூலம் என்னும் மருந்து நீக்குவதுபோல உயிரைப் பற்றிய ஐம்பிணிகளை இந்நூல் நீக்குகிறது.

"முழுதுணர்ந்து மூன்றொழித்த மூவாதான் பாதம்
பழுதின்றி ஆற்றப் பணித்து.........." (கடவுள் வாழ்த்து)

என்ற இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் வழி இந்நூலாசிரியர் சமண சமயத்தவர் என அறிகிறோம். இவர் வாழ்ந்த காலம் கி.பி.5ஆம் நூற்றாண்டாகும். இந்நூலின்கண் கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்று; நூற்பாடல்கள் 96, நூலிறுதியில் அமைந்த பாயிரப்பாடல் என 98 பாடல்கள் உள்ளன. இந்நூலில் சமணர்களின் அறங்கள் காணப்படினும் பெரும்பான்மை எல்லாருக்கும் உரிய பொது அறங்களே உள்ளன.

"தோற்கன்று காட்டிக் கறவார் கறந்தபால்
பாற்பட்டா ருண்ணார் பழிபாவம்"

என்னும் பாடல் வழி தோற்கன்றைக் காட்டிப் பசுவிடம் பால் கறக்கும் வழக்கம் அக்காலத்திலேயே இருந்ததை அறியலாம். இந்நூலின் பல விடங்களில் கொல்லாமை, புலாலுண்ணாமை ஆகிய இரு அறங்கள்

Scanned by CamScanner

கூறப்படுகின்றன. மேலும், சிறந்த கவிஞனுக்குரிய இலக்கணம், வாழ்நாளில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நலன்கள் ஆகியவையும் கூறப்படுகின்றன இந்நூலில்

| | |
|---|---|
| கற்புடை மகளிர் | 25 |
| ஆசிரியர் - மாணாக்கர் நிலை | 29 |
| ஒரு நோயும் இன்றி வாழ்வார் | 76 |
| எண்பதின் மேலும் வாழ்வார் | 79 |
| மேதை - பேதை | 22, 23 |

ஆகியன பற்றிக் கூறப்படும் கருத்துக்கள் மிகச் சிறப்புடையன

## 6. ஏலாதி

ஏலாதி என்பது ஏலத்தை ஆதியாகக் கொண்டு செய்த பல பொருட்களின் கூட்டு மருந்தாகும். ஏலம் ஒரு பங்கும், இலவங்கப்பட்டை இரண்டு பங்கும், நாககேசுரம் மூன்றுபங்கும், மிளகு நான்கு பங்கும், திப்பிலி ஐந்து பங்கும், சுக்கு ஆறு பங்குமாகச் சேர்த்துச் செய்யப்பட்ட ஏலாதி சூர்ணம் உடல் நோயை நீக்கி வலிமை அளித்தல் போல, பாடல் தோறும் அமைந்த பொருள்கள் அறியாமையை நீக்கி, மெய்யுணர்வை அளிக்க வல்லது என்பதை இந்நூற் பெயரால் அறியலாம்.

இதன் ஆசிரியர் கணிமேதாவியார். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திணைமாலை நூற்றைம்பதின் ஆசிரியரும் இவரே யாவார். இந்நூலில் எண்பத்திரண்டு வெண்பாக்கள் காணப்படுகின்றன. கொல்லாமை, புலாலுண்ணாமை, எளியோர்க்கு உணவு, உடை ஆகியன வழங்குதல் போன்ற அறங்களை எடுத்துரைக்கின்றது.

உலகில் அரசகுலப் பிறப்பும், மாண்புமிக்க மனைவியொடு பெரும் இல்வாழ்வும் பெறற்கரிய பேறுகள் என்பது இவர் கருத்து. சமண சமயத்தவராகிய இவர் இவ்வாறான கருத்தினைக் கொண்டிருப்பது வியப்பதற்குரியதே.

இந்நூலின்கண் மன்னர்களுக்கு ஏற்ற ஒழுக்கமுறைகளும் எத்தகையோர் விண்ணுலக வாழ்வு பெறத்தக்கவர் என்பனவும் பல பாடல்களில் கூறப்படுகின்றன. பணிவுடைமை முதலிய நல்லொழுக்கம் மேற்கொள்ளுதல், கொலை புரியாமை, புலால் உண்ணாமை, அருளுடைமை, இன்சொல்லுடைமை முதலியன சிறப்பான அறங்கள் என்பது இந்நூலாசிரியரியன் கருத்துக்களாகும். இதனை

Scanned by CamScanner

"நிறையுடைமை நீர்மை உடைமை கொடையே
பொறையுடைமை பொய்ம்மை புலால்கண் மறையுடைமை
வேயன்ன தோளாய் இவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்னன் என்னத் தகும்."

என்பதால் அறியலாம்.

## 7. இன்னாநாற்பது

இன்னது இன்னது துன்பம் பயக்கும் எனக் கூறும் 40 பாடல்களைக் கொண்டிருப்பதால் இந்நூல் இன்னாநாற்பது எனப் பெயர் பெற்றது. கடவுள் வாழ்த்தோடு 41 பாடல்கள் இந்நூலில் காணப்படுகின்றன. இந்நூலாசிரியர் கபிலர். இவர் சங்க காலப் புல்வரினின்று வேறுபட்டவர். இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலில் ஆசிரியர்-

"முக்கட் பகவன் அடிதொழார்க்கு இன்னா
பொற்பனை வெள்ளையை உள்ளாது ஒழுகுஇன்னா
சக்கரத்தனை மறுப்பு இன்னா? ஆங்கு இன்னா
சத்தியான் தான்தொழா தார்க்கு"

எனச் சிவன், பலராமன், மாயோன், முருகன் ஆகிய நால்வரையும் வணங்கக் காண்கிறோம். எனவே, இவர் வேத மதத்தவராவார். இவருடைய காலம் கி.பி. 4ஆம் நூற்றாண்டு. இந்நூலில் கூறப்படும் கருத்துக்களில் சில, பிற அற நூல்களைப் போன்றே சங்ககாலப் பாடல்களிலிருந்து எடுத்தாளப்பட்டவை.

"மனையுறை கோழியொடு ஞமலிதுன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
"மறைகாப் பாளர் உறைபதி"

என்ற பெரும்பாணாற்றுப்படையின் கருத்தை, 'பார்ப்பாரில் கோழியும் நாயும் புகல் இன்னா' (2) என்ற அடியால் காண்கிறோம். இந்நூலில் திருக்குறள் கருத்துக்கள் பெருவாரியாகக் கையாளப்பட்டுள்ளன. சான்றாக

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல். (குறள்-894)

என்ற குறட் கருத்தை,

பெருவலியார்க்கு இன்னா செயல் இன்னா (5)

என இந்நூலில் காணலாம். இது போன்ற பல கருத்துக்கள் திருக்குறளை நினைவுபடுத்துகின்றன. இந்நூல் வழி சில ஒழுக்க முறைகளும் பழக்க வழக்கங்களும் நமக்குக் கிடைக்கின்றன.

Scanned by CamScanner

## 8. இனியவை நாற்பது

இன்னது இன்னது வாழ்விற்கு இனியது எனக் கூறுவதாக அமைந்த பாடல்களைக் கொண்டது இந்நூல். இதன் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார். இவ்வாசிரியரின் பெயர் பூதன் என்றும், தந்தையார் பெயர் சேந்தனார் என்றும் அறிஞர்கள் கருது கின்றனர். இவருடைய காலம் கி.பி.5ஆம் நூற்றாண்டு என்பர்.

இந்நூலில் கடவுள் வாழ்த்தோடு நாற்பத்தொரு வெண்பாக்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் பெரும்பான்மை மூன்று கருத்துக் களையும், சிற்சில நான்கு கருத்துக்களையும் கொண்டுள்ளன. இனியவை பயப்பனவாக மொத்தம் 127 கருத்துக்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

இந்நூலில் அமைந்த கடவுள் வாழ்த்துப் பாடல், சிவன், மால், பிரமன் ஆகிய மூவரையும் குறிக்கிறது. பிரமன் வணக்கம் முதன் முதலாக இக்கடவுள் வாழ்த்துப் பாடலில் அமைந்திருப்பதைக் காணுகிறோம். இந்நூலில் பல இடங்களில் திருக்குறட் கருத்துக்கள் எடுத்தாளப் பட்டுள்ளன.

> 'ஒற்றினால் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
> கொற்றம் கொள்ளக்கிடந்த தில்' (குறள்-583)

என்னும் குறள் இந்நூலின் 36ஆவது பாடலில் 'ஒற்றினால் ஒற்றிப் பொருள் தெரிதல் முன்னினிதே' என எடுத்தாளப்பட்டுள்ளது.

> 'குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர்.' (குறள்-66)

என்னும் குறட் கருத்து,

> 'குழவி தளர்நடை காண்டல் இனிதே
> அவர் மழலை கேட்டல் அமிழ்தினுமினிதே' (14)

என்ற பாடலில் அமைந்துள்ளது. திருக்குறட் கருத்துக்களை இவ் வாசிரியர் தம் நூலில் கொண்டது போன்றே இன்னாநாற்பதின் கருத்துக்கள் பலவற்றை இந்நூலில் கொண்டுள்ளார்.

> 'யானையில் மன்னரைக் காண்டல் நனியின்னா
> ஊனைத்தின் றூனைப் பெருக்குதல் முன்னின்னா
> ... இன்னா கான்யாறிடை யிட்டவூர்' (இன்னா. 23)

> 'யானையுடைப் படைக்காண்டல் முன்னினிதே
> ஊனைத் தின்றூனைப் பெருக்காமை முன்னினிதே

கான்யாற் றடைகரையூ ரினிது' (இனிய. 5)

'கல்லார் உரைக்கும் கருமப் பொருள் இன்னா' (இன்னா.15)

'கற்றறிந்தான் கூறும் கருமப் பொருளினிதே' (இனிய 33)

எனச் சான்று காட்டலாம். இந்நூலிலும் புலாலுண்ணாமை, கொல்லாமை ஆகியன வலியுறுத்தப்படுகின்றன.

## 9. நான்மணிக்கடிகை

இது ஓர் அற நூலாகும். இதன் ஆசிரியர் விளம்பி நாகனார். விளம்பி என்பது இப்புலவர் பிறந்த ஊராக இருக்கலாம். நூலின் தொடக்கத்தில் உள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களால் இவர் வைணவ மதத்தவர் எனத் தெரிகிறது. இவர் கி.பி. நான்காம் நூற்றாண்டினர். இந்நூலில் கடவுள் வாழ்த்துப் பாடல் இரண்டுடன் மொத்தம் 103 வெண்பாக்கள் உள்ளன. இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் மணி போன்ற நான்கு கருத்துகள் வெளியிட்ப்படுவதால் இந்நூல் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது.

இந்நூலாசிரியர் எடுத்துரைக்கும் சிறந்த கருத்துக்களும், அறிவுரைகளும் இவருடைய புலமைத் திறத்திற்கும் அகல அறிவுக்கும் சிந்தைத் தெளிவிற்கும் எடுத்துக்காட்டாய் விளங்குவன. இந்நூல் திருக்குறள் போன்று சிறந்த உலகியல் அறங்களைக் கொண்டுள்ளது. இந்நூற் பாடல்கள் அனைத்தும் எளிமையான நடையில் யாவருக்கும் புரியும் வண்ணம் அமைந்துள்ளன. இந்நூல் தொல்காப்பியர் கூறும் அம்மை என்னும் வனப்பு பெற்றது. அறத்தின் வலிமையை,

'நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை; பெண்மை
நலத்துக் கணியென்ப நாணம்; தனக்கணி
தான்செல் லுலகத் தறம்.' (9)

என்ற பாடல் உவமை அழகோடு விளங்குகிறது.

'மனைக்குப்பாழ் வாணுத லின்மை; தான்செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்பாழ்
கற்றறி வில்லா நட்பு.' (20)

என்பது கல்வியின் சிறப்பைத் தரும் பாடல்.

இந்நூலாசிரியர் கூறும் அறங்கள் சிலவற்றைக் காணலாம்.

'அருளிற் பிறக்கும் அறநெறி எல்லாம்
பொருளிற் பிறந்து விடும்.' (5)

Scanned by CamScanner

'... வெல்வது வேண்டின் வெகுளி விடல்' (15)

'... குலஞ்சிதைக்கும் கூடார் கண் கூடிவிடின்' (21)

'... ஈன்றாளின் என்னக் கடவுளும் இல்.' (54)

## 10. முதுமொழிக் காஞ்சி

இதுவும் ஓர் அறநூலாகும். இதன் ஆசிரியர் மதுரைக் கூடலூர்க் கிழார். இவர் கடைச்சங்கப் புலவராவார். இந்நூலில் காணப்படும் அடிகள் ஒவ்வொரு பழமொழி போலக் காணப்படும். பழமொழி முது மொழி எனவும் வழங்கப்பெறும். காஞ்சி என்பது உலக முறைகளைப் பற்றிக் கூறுவதாகும். நிலையாமையை வலியுறுத்துவது இந்நூலின் தலையாய நோக்கம் என்பது பெறப்படும்.

இந்நூல் சிறந்த பத்து, அறிவுப்பத்து, பழியாப்பத்து, துவ்வாப்பத்து, அல்லப்பத்து, இல்லைப்பத்து, பொய்ப்பத்து, எளியபத்து, நல்கூர்ந்த பத்து, தண்டாப்பத்து ஆகிய அதிகாரங்களைக் உடையது. ஒவ்வொரு அதிகாரமும் பத்துப்பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பத்திலும் அமைந்த கருத்துகளுக்கேற்ப அந்தப் பத்துக்கள் பெயர் பெறுகின்றன. மேலும், இந்நூலிலுள்ள ஒவ்வொரு பத்தும்,

ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்

என்னும் தொடக்கத்தைப் பெற்றுள்ளன.

இனி ஒவ்வொரு பத்திலும் உள்ள கருத்துக்களைக் காண்போம்.

| | | |
|---|---|---|
| 1. | 'கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று' | சிறந்தபத்து |
| 2. | 'சொற்சோர்வு உடைமையின் எச்சோர்வும் அறிப' | அறிவுப்பத்து |
| 3. | 'சிறியா ரொழுக்கம் சிறந்தோரும் பழியார்' | பழியாப்பத்து |
| 4. | 'நாணில் வாழ்க்கை பசித்தலின் துவ்வாது' | துவ்வாப்பத்து |
| 5. | 'ஈரம் அல்லாதது கிளை நட்பன்று' | அல்லப்பத்து |
| 6. | 'இரப்போர்க் கீதலின் எய்துஞ் சிறப்பில்லை' | இல்லைப்பத்து |
| 7. | 'காலமறியாதோன் கையுறல் பொய்' | பொய்ப்பத்து |
| 8. | 'உண்டி வெய்யோர்க்கு உறுபிணி யெளிது' | எளியபத்து |
| 9. | 'மிகமுத் தோன் காமம் நல்கூர்ந்தன்று' | நல்கூர்ந்த பத்து |
| 10. | 'துன்பம் வேண்டுவோன் இன்பம் தண்டான்' | தண்டாப்பத்து |

Scanned by CamScanner

## 11. ஆசாரக்கோவை

இந்நூலும் ஓர் அற நூலாகும். இதன் ஆசிரியர் கயத்தூர் பெரு வாயின் முள்ளியார். இவருடைய முன்னோர்கள் கயத்தூரில் இருந்தனர் என்றும், இவர் பெருவாயில் என்னும் ஊரில் வாழ்ந்தவர் என்றும் அறிந்து கொள்ளுமாறு கல்வெட்டுச் சான்றுகள் உள. இவர் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டினர். இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலின் மூலம் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என அறிய முடிகிறது.

இந்நூல் கடவுள் வாழ்த்துப் பாடலோடு 101 வெண்பாக்களை யுடையது. இந்நூலில் குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பா வகைகள் காணப்படுகின்றன. இந்நூலில் ஒவ்வொருவரும் தம் வாழ்நாட்களில் மேற்கொள்ளத் தக்கனவாகவும் விலக்கத்தக்கனவாகவும் உள்ள நெறிமுறைகள் (ஆசாரங்கள்) கூறப்படுகின்றன. இந்நூல் வடமொழியில் உள்ள ஸ்மிருதி நூல்களைப் போன்றதொரு நூலாகும்.

இந்நூலில் காணப்படும் உணவு உட்கொள்ளும் முறை, ஆடை அணியும் முறை, நீராடல், தூங்கும் முறை போன்றவை இக்கால வழக்கிற்கு முற்றிலும் ஒவ்வாதனவாகும். நன்றியறிதல், பொறை யுடைமை, இன்சொல் கூறல், எவ்வுயிர்க்கும் இன்னாதவற்றைச் செய்யாமை, கல்வி, ஒப்புரவாற்றல், அறிவுடைமை, நல்லினத்தாரொடு நட்பு கொள்ளுதல் ஆகியன ஆசாரங்களுக்கு வித்து என இந்நூலாசிரியர் கூறியிருப்பது கருதற்பாலதாம்.

> வைகறை யாமம் துயிலெழுந்து தான் செய்யும்
> நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதின்
> தந்தையும் தாயுந் தொழுது எழுக என்பதே
> முந்தையோர் கண்ட முறை. (4)

என வைகறை துயிலெழுந்து ஆற்ற வேண்டிய பணிகளை இந் நூலாசிரியர் கூறுகிறார். இந்நூலில் கூறப்படுகின்ற சிற்சில கருத்துக்கள் இன்றைய நடைமுறைக்கு ஒவ்வாததாயினும் பல ஒழுக்க நெறிகள் என்றும் நிலைக்கும் தன்மையன.

# பதினெண்கீழ்க்கணக்கில் அகநூல்கள்

## 12. கார் நாற்பது

இந்நூலாசிரியர் கடைச்சங்கப் புலவர்களில் ஒருவரான மதுரை கண்ணங் கூத்தனார். இவரது காலம் கி.பி. 4-5ஆம் நூற்றாண்டாக

Scanned by CamScanner

இருக்கலாம் என்று கூறுவர். கார்காலத்து வருவேனென்று வினைமேற் சென்ற தலைவன் குறித்த காலத்தில் வாராமையால் தலைவி பிரிவுத் துயரால் வருந்துவதும், தலைவியைத் தோழி ஆற்றுவதும், வினை முடித்து மீண்டு வரும் தலைவன் தன் உள்ள உணர்வுகளைப் பாகனுக்கும், தன் நெஞ்சுக்கும் கூறுவதுமாக நாற்பது வெண்பாக்களைக் கொண்டது. இந்நூலின் தொடக்கத்தில் சிறப்புப் பாயிர வெண்பா ஒன்றும் காணப்படுகிறது.

> **"எல்லா வினையும் கிடப்ப எழுநெஞ்சே**
> **கல்லோங்கு கானம் களிற்றின் மதம்நாறும்**
> **பல்இருங் கூந்தல் பனிநோனள் கார்வானம்**
> **எல்லியும் தோன்றும் பெயல்."** (24)

என்பது தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கார்நாற்பது எல்லாப் பாடல்களுமே சுவையுடையன. கார்த்திகையில் விளக்கேற்றும் வழக்கம் அக்காலத்தில் உண்டு என இந்நூலின் வழி அறிகிறோம். மாயோனையும், பலராமனையும் வேள்வித்தீயையும் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் காணப்படுகின்றன.

## 13. ஐந்திணை எழுபது

இந்நூலின் ஆசிரியர் மூவாதியார். இவ்வாசிரியர் சமண சமயத்தவர் எனக் கருதப்படுகிறார். இந்நூலில் திணைக்குப் பதினான்கு வெண்பாக்களாக, குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்து திணைக்கும் எழுபது பாக்கள் உள்ளன. ஆனால், தற்போது கிடைத்து இருப்பன அறுபத்தாறு பாடல்களே. இவையன்றி நூல் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துப்பாடல் ஒன்றும் உள்ளது. கடவுள் வாழ்த்துப்பாடல் இந்நூலாசிரியரால் எழுதப்பட்டதன்று என அறிஞர்கள் கருதுகின்றனர். கடவுள் வாழ்த்துப் பாடலில் விநாயக வணக்கம் கூறப்படுகிறது. விநாயக வணக்கம் தமிழ்நாட்டில் புகுந்தமை கி.பி. ஏழாம் நூற்றாண்டு. ஆகையால் இந்நூல் எழுந்த காலமும் கி.பி.ஏழாம் நூற்றாண்டாகலாம்.

பாடல்கள் உள்ளுறை உவமங்கள் இலக்கியச் சுவை செறிந்தனவாகக் காணப்படுகின்றன. இந்நூலால் தமிழகத்தின் பண்டை வழக்கங்கள் பல அறியக் கிடக்கின்றன. பகைவரை அழித்த வீரர்களுக்குப் பாலை நிலத்தில் கல் நாட்டுதல், மனையறம் பூண்ட காதலர் தம் புதல்வனுக்கு ஐம்படைத்தாலி அணிவித்துப் பெயர் சூட்டி மகிழ்தல், மணம் புரியும் காலத்தில் தலைவன் கூறும் உறுதி மொழிகளைத் தலைவி ஏட்டில் எழுதிப் பெறுதல், பரத்தையிற் பிரிந்த தலைவன் தலைவியின் ஊடலைத் தணிக்கப்

Scanned by CamScanner

பாணனைத் தூது அனுப்புதல் போன்ற வழக்கங்களை இந்நூலின் வழி அறிய முடிகிறது.

## 14. ஐந்திணை ஐம்பது

இந்நூலாசிரியர் மாறன் பொறையனார். இப்புலவர் தென்பாண்டிய நாட்டைச் சார்ந்தவர் என அறியலாம். இவர் கி.பி. நான்காம் நூற்றாண்டினர். இவரை வண்புள்ளி மாறன் பொறையன் என இந்நூலின் பாயிரப் பாடல் கூறுவதால் அரசியல் வரவு, செலவு தொடர்புடைய ஓர் அலுவலராய் இருந்திருக்க வேண்டும் எனக் கொள்வர். இந்நூல் ஒவ்வொரு திணைக்கும் பத்துப் பத்துப் பாக்களாக ஐந்து திணைகளுக்கும் ஐம்பது பாக்களைக் கொண்டுள்ளது. இந்நூற் பாடல்கள் ஐந்திணை எழுபதில் அமைந்த குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் போன்ற வைப்புமுறை போன்றல்லாது முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற வைப்பு முறையில் அமைந்துள்ளன. பாயிரப் பாடலோடு இந்நூலில் 51 வெண்பாக்கள் உள்ளன.

> **"மல்லார்க் கடந்தான் நிறம்போன்று இருண்டெழுந்து**
> **செல்வக் கடம்பு அமர்ந்தான் வேல் மின்னி- நல்லாய்**
> **இயங்கெயி லெய்தவன் தார்பூப்ப ஈதோ**
> **மயங்கி வலனேருங் கார்."** (1)

கண்ணனது வண்ணத்தைப் போல் மேகங்கள் எழவும், முருகனது வேலொளியைப் போல மின்னல்கள் தோன்றவும், சிவன் விரும்பும் கொன்றை மலர்கள் மலரவும் கார்காலம் வந்தது எனக் கூறும் இப்பாடல் இலக்கியச் சுவைக்கொரு எடுத்தக்காட்டாகும். இந்நூலில் முல்லைத் திணை சார்ந்த பாடல்களில் கார்கால நிகழ்ச்சிகள் சுவைமிக்கனவாகக் கூறப்படுகின்றன. இந்நூற்பாக்கள் யாவும் சங்க காலத்தில் எழுந்த அகத்துறைப் பாடல்களைப் போன்று பொருட்செறிவும், இலக்கிய மேன்மையும் கொண்டவை. இந்நூலின் வழி மக்கள் காடுகளை அழித்துப் பெற்ற சாம்பலை உரமாக நிலத்திற்கு இட்டமை, போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் நட்டமை, வெங்காரத்தைப் புண்ணுக்கு மருந்தாக இட்டமை போன்ற அக்கால வழக்கங்களை அறிகிறோம்.

## 15. திணை மொழி ஐம்பது

இந்நூல் ஆசிரியர் கண்ணஞ்சேந்தனார். இவர் சங்கப் புலவராகிய சாத்தந்தையார் என்பவருடைய மகன் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். இக்கருத்தை நிலைநாட்ட போதிய சான்றுகள் இல்லை. இவரது

Scanned by CamScanner

காலம் கி.பி.4ஆம் நூற்றாண்டாகும். ஐம்பது வெண்பாக்களைக் கொண்ட இந்நூல் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் வைப்பு முறையில் திணைக்குப் பத்துப்பாக்களைக் கொண்டது.

இந்நூலில் குறிஞ்சி நிலக்காட்சிகள் குறிப்பிடத்தக்க சிறப்புடையனவாய் அமைந்துள்ளன.

யாழும் குழலும் முழவும் இயைந்ததென
வீழும் அருவி விறன்மலை நன்னாட (7)

என்பது காட்டில் அருவி விழும் காட்சியாகும்.

முரிபரல வாகி முரணழிந்து தோன்றி
எரிபரந்த கானம் இயைப்பொருட்குப் போவீர்
அரிபரந்த உன்கண்ணாள் ஆற்றாமை நும்மின்
தெரிவார்யார் தேரு மிடத்து. (12)

என்ற பாலை நிலப் பாடலில் சுரத்தின் கொடுமையைக் காணலாம். இந்நூலிலும் திருக்குறள், நாலடியார் ஆகியவற்றின் கருத்துக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

மயில்கொல் மடவாள்கொல் மாநீர்த் திறையுள்
பயில்வதோர் தெய்வங்கொல்...

என்பது,

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை
மாதர்கொல் மாலும் என் நெஞ்சு (குறள்-1081)

என்னும் திருக்குறளுடன் நோக்கத்தக்கது.

## 16. திணைமாலை நூற்றைம்பது

இதன் ஆசிரியர் கணிமேதாவியார், ஏலாதி நூலை ஆக்கியவரும் இவரே. இந்நூல் 153 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. குறிஞ்சித் திணைக்கு 31 பாடல்கள், நெய்தல் திணைக்கு 31 பாடல்கள், பாலைக்கு 30 பாடல்கள், முல்லைக்கு 31 பாடல்கள், மருதத்திற்கு 30 பாடல்கள் ஆக 153 பாடல்கள் இந்நூலில் உள்ளன. இவையன்றி நூலின் இறுதியில் பாயிரப்பாடல் ஒன்று உள்ளது. இந்நூலைப் பாடிய சமணப் புலவராகிய கணிமேதாவியார் அகச்சுவை அமைந்த இன்பப் பாடல்களைப் பாடியிருப்பது அவர் தம் சங்கநூற் புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

திங்களுள் வில்லெழுதிக் தேராதுவேல் விலக்கித்
தங்களுள் உளாளென்னும் தாழ்வினால் -இங்கண்
புனங்காக்க வைத்தார் போற் பூங்குழலைப் போந்தென்
மனங்காக்க வைத்தார் மருண்டு (30)

Scanned by CamScanner

என்பது தலைவியின் அழகைத் தரும் பாடலாகும். இப்பாடலின் பொருள், சந்திரன் போன்ற முகத்தில் விற்போன்ற இரண்டு புருவங்கள். புருவங்களுக்குக் கீழே வேற் போன்ற இரு விழிகள், தங்கள் குலத்தில் பிறந்தவள் தானே என்ற தாழ்வு மனப்பான்மையால் இவள் உடன் பிறந்தோர், பூச்சூடிய கூந்தலை உடைய இப்பெண்ணைத் தினைப் புனங்காக்க வைத்தனர். இவளை நான் பார்த்த அளவிலே அவள் என் மனத்தை விட்டு நீங்காதவளாகினாள், நானும் அவளை என் மனத்தி னின்றும் நீக்காதவனானேன். இப்பாடலில் தலைவியின் அழகும் தலைவனின் புலம்பலும் எண்ணி எண்ணி இன்புறத்தக்கன.

## 17. கைந்நிலை - இன்னிலை

இந்நூலாசிரியர் புல்லங்காடனார். இவர் தென்பாண்டி நாட்டைச் சேர்ந்தவர். இவரது தந்தை காவிதியார் என்ற பட்டம் பெற்றவரா யிருத்தலால் இவர் பாண்டியருக்கு அமைச்சராய் இருந்திருக்க வேண்டும் எனக் கருதுவர். இந்நூலெழுந்த காலம் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டாகும்.

இந்நூல் ஒவ்வொரு திணைக்கும் பன்னிரண்டு பாடல்களாக மொத்தம் 60 வெண்பாக்களைக் கொண்டது. ஆனால், இந்நூலில் சில பாடல்கள் சிதைந்த நிலையிலேயே கிடைத்துள்ளன. சில பாடல்கள் முழுமையாகக் கிடைத்தில. இந்நூலின் திணை வைப்பு முறை குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பதாகும்.

கை- என்பது ஒழுக்கம் என்னும் பொருளுடைய சொல். அகத்திணை ஒழுக்க (கை) நிலைகளைப் பற்றிக் கூறுவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூலிலும் அரிய மலைக் காட்சிகளும், பாலை நில வெம்மையும், தலைவன் - தலைவி காதல் நிலையும் சிறப்பாகக் கூறப் படுகின்றன.

**மலைநாடன்தன் கேண்மை**
**சொல்லச் சொரியும் வளை.** (7)

**பெருங்கண் மலைநாடன் பேணி வரினே**
**சுருங்கு மிவளுற்ற நோய்.** (8)

போன்ற பாடல்கள் காதல் வயப்பட்ட தலைவியின் நிலையைக் கூறுவன.

**இன்னிலை**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் சேர்க்கப்பட வேண்டியது 'கைந்நிலை' யா, 'இந்நிலை' யா என்பது பற்றிய மாறுபட்ட கருத்து உள்ளமை முன்னரே கூறப்பட்டது. இந்நூலாசிரியர் பொய்கையார்.

Scanned by CamScanner

இவர் களவழி நாற்பது பாடிய பொய்கையாரா என்பது ஆய்வுக்குரியது. இன்னிலை என்பது இனிமையாகிய நிலை என்று பொருள்படும். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால், வீட்டுப்பால் என நான்கு பகுதிகளைக் கொண்டது. இந்நூலைத் தொகுத்தவர் மதுரை ஆசிரியர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இவர் நூலுக்குக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றையும் பாடியுள்ளார். இந்நூலின் பொருட் பாலில் பொருளின் முதன்மை கூறப்படுகிறது. இன்பத்துப்பாலில் காமனின் ஆட்சியால் இயங்கும் உலக மாட்சி காட்டப்படுகிறது.

## பதினெண்கீழ்க்கணக்கில் புறநூல்

### 18. களவழி நாற்பது

களம் என்பது போர்க்களத்தைக் குறிக்கும். போர்க்களச் செய்திகள் பற்றிய பாடல்களைக் கொண்ட புறத்திணை சார்ந்த நூலாகும். சோழன் செங்கணானொடு சேரமான் கணைக்காலிரும் பொறை கழுமலம் என்னும் இடத்தில் போர்செய்து தோற்ற காலை அவனைச் சிறை மீட்க சென்ற பொய்கையார் என்னும் புலவரால் இந்நூல் பாடப்பட்டுள்ளது. இந்நூல் சங்க காலத்தில் தோன்றியதென்று ஒரு சாராரும் கி.பி.9ஆம் நூற்றாண்டில் தோன்றியதென இன்னொரு சாராரும் கருதுவர்.

நாவலர் திரு. நா.மு. வேங்கடசாமி நாட்டார், திரு.டி.வி.சதாசிவப் பண்டாரத்தார், உ.வே.சா. போன்ற அறிஞர்கள் இந்நூலைச் சங்கநூலே எனக் கொள்கின்றனர். இந்நூல் போர்க்களக் காட்சிகளை உள்ளவாறு வருணிக்கிறது. சோழ மன்னன் செங்கண்மால் சேரனோடு போரிட்ட களத்து நிகழ்ச்சிகளில் பெரும்பான்மையாக யானைப் போர்ச் செய்திகளே இந்நூல் கூறப்படுகின்றன.

பல்கணை எவ்வாயும் பாய்தலிற் செல்லாது
ஒல்கி உயங்குங் களிறெல்லாம் தொல்சிறப்பின்
செவ்வலங் குன்றம் போல் தோன்றும் (10)

போன்ற பல பாடல்கள் போர்க்களத்தில் காணப்படும் யானைகளின் காட்சிகளைத் தருகின்றன. மேலும் அச்சத்தைத் தரத்தக்க பல போர்க் காட்சிகள் இலக்கியச் சுவையுடன் கூறப்படுகின்றன.

உருவக் கடுந்தேர் முருக்கிமற்று அத்தேர்ப்
பருதி சுமந்தெழுந்த யானை இருவிசும்பில்
செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற (4)

Scanned by CamScanner

என்ற பாடலில் தேர்ச்சக்கரத்தைத் துதிக்கையால் யானை சுமந்திருக்கும் காட்சி ஞாயிறு சேர்ந்திருக்கும் மலையோடு ஒப்பிடப்பட்டுள்ளது.

சோழ வீரர்களால் துண்டிக்கப்பட்ட மாற்றான் கையையும், காலையும் கவ்விக் கொண்டு பருந்துகள் வானத்தில் செல்கின்றன. செங்குருதி வெள்ளத்தில் பிணங்கள் மிதந்து வருகின்றன. பிணத்தைக் கவ்விக் கொண்டு நரிகள் ஓடுகின்றன. எங்கும் பிணக்குவியல் - மடிந்து விழும் வீரர்கள் - ஒடிந்து விழும் தேர்கள் - குவிந்து விழும் யானைகள் - வட்டமிடும் கழுகுகள் என்பன போன்ற காட்சிகள் இந்நூலினைப் படிப்போர் உள்ளத்தைக் கவரும் தன்மை உடையன.

பதினெண் கீழக்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய இலக்கியம் எனவும் கூறப்படும். நீதிப்பாடல்கள் சங்க இலக்கியத்திற்குப் பிறகு மிகுதியாகத் தோன்றின. அறம் என்னும் பொருளிலேயே நீதி வழங்கப் படுகிறது. தருமம் என்னும் சொல்லுக்கு இணையாக நீதி என்னும் சொல்லைச் சமணர் வழங்கலாயினர். நீதிப் பாடல்களை மூதுரை, குறும் பாடல்கள், நீதி இலக்கியம் என மூவகையாகப் பகுக்கலாம்.

பதினெண்கீழ்கணக்கு நூல்கள் சிறப்பு வாய்ந்தவை. ஆங்கிலத்தில் மட்டுமே ஐம்பதிற்கும் மேற்பட்ட மொழி பெயர்ப்புகளுடைய திருக்குறள் உலகப் பொதுமறையாக விளங்குகிறது. திருக்குறள். நாலடியார் முதலியன உலக மனித சமுதாயத்திற்கே அறக்கருத்துக்களை உரைக்கும் உயர்ந்த நூல்கள். மறையாகவும் மருந்தாகவும் மணிமொழிக் கோவையாகவும் விளங்கும் சிறப்புமிக்கன பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்.



Scanned by CamScanner

# 10

# தமிழில் காப்பியங்களும் புராணங்களும்

தமிழ் தொன்மைச் சிறப்பும், இலக்கிய வளமும், இனிமைப் பண்பும் வாய்ந்த மொழி. விழுமிய உணர்ச்சியும் வளமான கற்பனையும், நல்ல ஓசை நயமும் உடைய எண்ணற்ற பாடல்கள் சங்ககாலத்தில் இயற்றப்பெற்றன. அவை எல்லாம் தனித்தனிப் பாடல்கள். தொல் காப்பியப் பொருளதிகாரத்தில், செய்யுளியல் என்ற பகுதியில் வனப்பு, வண்ணம் என்பவைகளுக்கு உரையாசிரியர்கள் உரை கூறும்போது பல காப்பியங்களை எடுத்தக்காட்டாகக் கூறுகின்றார். இவை எல்லாம் தொல்காப்பியனாருக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றிய நூல்களாகும். இலக்கியங்கள் தோன்றிய பிறகு அவற்றில் காணப்படும் பொதுவான விதிகளைத் திரட்டிக் கூறுவதே இலக்கணம். எனவே தொல்காப்பியருக்கு முன்னரே பல காப்பியங்கள் தமிழில் தோன்றி யிருக்க வேண்டும்; அவற்றையெல்லாம் கண்டே தொல்காப்பியர். காப்பிய இலக்கணமாக வனப்பு, வண்ணம் ஆகியவற்றைக் கூறுகின்றார் என்று கருதலாம்.

அடியார்க்கு நல்லார் என்ற உரையாசிரியர் சங்க காலத்துக்குப்பின் இயற்றப்பட்ட காப்பியங்களுள் இணையற்றதாக விளங்கம் பெருங் கதையைக் குறிப்பிட்டு அந்நூல் இடைச்சங்க காலத்துச் செய்யுட்களாகிய கலி, குருகு, வெண்டாளி ஆகியவற்றால் இயன்றது என்று கூறுகின்றார். பெருங்கதை ஆசிரியர் இடைச்சங்க காலத்து நூல்களைப் பின்பற்றினார் என்றால், அவர் நூல் இயற்றப் பெறுவதற்கு முன்பே, தமிழில் அந்நூலைப் போன்ற பல நூல்கள் இருந்திருந்தல் வேண்டும் என்பதை அறிய முடிகின்றது.

**காப்பியம் - விளக்கம்**

ஒரு கதையை நீண்ட செய்யுள் வடிவில் கூறுவதைக் காப்பியமாகக் கருதுவர். காவ்ய என்ற வடசொல் காப்பியமாகத் தமிழில் வழங்கப்பட்டு

Scanned by CamScanner

வருகிறது. ஆங்கிலத்தில் எபிக் (Epic) என்ற சொல் காப்பியத்தைக் குறிக்கும்.

தன்னேரில்லாத தலைவன் ஒருவனின் அரிய பெரிய செயல்களை விரித்துரைப்பது காப்பியமாகும் என்று டைக்சன் (Dixon) என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். காப்பியம் என்ற சொல் பழங்காலத்தில் பொருள் தொடர்நிலைச் செய்யுள் என்று வழங்கப்பட்டது. 'நாடகக் காப்பியம் நன்னூல்' (மணிமேகலை) 'காப்பிய கோசம்' 'காப்பிய வாசனை கலந்தவை சொல்லி' (பெருங்கதை) 'காப்பியங்கவிகள்' (சிந்தாமணி) என்பன போன்ற இலக்கியத் தொடர்கள் பயின்று வருவதைக் காணலாம்.

காப்பியம் கதை நிகழ்ச்சிகளால், வருணனைகளால் நீண்டது; பெரியது. ஒரு காலத்தில் வாய்மொழியாக வழங்கப்பட்ட கதைகள் நாளடைவில் செய்யுள் வடிவில் காப்பியமாக வளர்ந்தது என்பர். இந்திய இலக்கியங்களில் குறிப்பாக வடமொழியில் காப்பிய வகை தொன்மை யான இலக்கிய வடிவங்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. காப்பியத்திற்கென இலக்கண வரையறையும் அம்மொழியில் உண்டு. தமிழில் காப்பிய இலக்கணத்தைக் கூறும் நூல் எதுவும் தொடக்க காலத்தில் இருந்ததற்கான சான்றுகள் இல்லை. வடமொழியைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட தண்டியலங்காரத்தில் தான் முதன் முதலாகக் காப்பியத்திற்கான இலக்கணத்தைக் காண முடிகின்றது. காப்பியத்திற்குரிய பொது இலக்கணமும், காப்பிய வகைகளும் அதில் காட்டப்படுகிறது.

### காப்பிய இலக்கணம்

கீழ்க்கண்ட இயல்புகளைக் கொண்டிருப்பின் பெருங்காப்பிய மாகும் என்பதை உணரலாம்.

- வாழ்த்து, வணக்கம் வருபொருள் கூறப்பெறுதல்.
- அறம், பொருள், இன்பம், வீடு என்ற நூற் பயன் உரைத்தல்
- தன்னேரில்லாத தலைவனை உடையதாக அமைதல்
- இயற்கைப் புனைவுகள் இடம் பெறுதல்
  (மலை, கடல், நாடு, நகர் முதலியன)
- நன் மணம் புரிதல், பொன் முடி கவிதல், பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல், சிறுவரைப் பெறுதல் முதலிய நிகழ்வுகள் இடம் பெறுதல்.
- மந்திரம், தூது, செலவு, இகல், வென்றி ஆகியன பெற்றிருத்தல்.

Scanned by CamScanner

- சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் இவற்றில் மூன்றினைப் பிரிவாகக் கொள்ளல்
- நெருங்கிய சுவையும் பாவமும் பெற்றிருத்தல்
- கற்றோர் புனையும் பெற்றியாதல்

எனத் தண்டியலங்காரம் காப்பிய இயல்பினைக் குறிப்பிடுகிறது. காப்பியம் என்பதில் பாவிகம் என்ற ஒரு பண்பு மிளிர வேண்டும் என்பது தண்டியின் காப்பியக் கொள்கையாக அமைகிறது.

### காப்பிய வகை

காப்பிய வகைகளை இருவகையாகக் காண்கிறார் தண்டி. நூற் பயனாகிய அறம், பொருள், இன்பம், வீடு இவற்றில் ஒன்று குறை யினும் அவை சிறுகாப்பியம் என்றும், நான்கும் அமைவதனைப் பெருங்காப்பியம் என்றும் பகுத்துக் கூறுகிறார். இப்புகுப்பினைத் தமிழ் இலக்கிய மரபிற்குரியதாக ஏற்றுக் கொள்ள இயலாது என்பது அறிஞர்களின் கருத்து. மேலை நாட்டார் காப்பியத்தை இரு வகையாகப் பாகுபடுத்துகின்றனர்.

1. பழைமைக் காப்பியம் (அல்லது) வளர்ச்சிக் காப்பியம்
2. பிற்காலக் காப்பியம் (அல்லது) கலைக்காப்பியம்

பழங்கதை நிகழ்ச்சிகள் மெருகேற்றம் பெறுவது முதல்வகை. புலவர் தாமே நிகழ்ச்சிகள், கதை மாந்தர்கள், உத்திகள் ஆகியவற்றை உருவாக்கிப் படைப்பது இரண்டாவது வகை. முதலாவது வகைக்குச் சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற காப்பியங்களையும் இரண்டா வது வகைக்குப் பாண்டியன் பரிசு, பாரத சக்தி மகா காவியம் போன்ற வற்றையும் சுட்டலாம்.

தமிழில் காணலாகும் காப்பியங்களை (அ) ஐம்பெருங்காப்பியங்கள், (ஆ) ஐஞ்சிறு காப்பியங்கள், (இ) பிற காப்பியங்களும் புராணங்களும் என்ற மூன்று நிலைகளில் வகைப்படுத்திக் காணலாம்.

## (அ) ஐம்பெருங்காப்பியங்கள்

### 1. சிலப்பதிகாரம்

#### காப்பிய அமைப்பும் சிறப்பும்:

சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களைக் (பிரிவு) கொண்டுள்ளது. ஒவ்வொரு காண்டமும் பல காதைகளாகப் (10+137) பிரிக்கப் பட்டுள்ளன. புகார்க் காண்டத்தில் கோவலன் கண்ணகியை மணந்து

Scanned by CamScanner

இல்வாழ்க்கையில் ஈடுபட்டதும், நடன அரங்கேற்றத்தில் கலையரசி மாதவியைக் கண்டு கோவலன் மயங்கி அவளோடு கூடி வாழ்ந்து இந்திர விழாவின் போது ஊடிப் பிரிந்து கண்ணகியிடம் திரும்பியதும், புது வாழ்க்கைக்காகப் பொருள் தேடக் கண்ணகியோடும், கவுந்தியடிகள் துணையோடும் மதுரைக்குச் சென்றதும் கூறப்படுகின்றன. மதுரைக் காண்டத்தில், மனைவியின் காற்சிலம்பு விற்கச் சென்ற கோவலன் கள்வன் எனப் பழிசுமத்தப்பட்டுக் கொலையுண்டதும் ஆராயாமல் கோவலனைக் கொன்ற பாண்டிய மன்னனிடம் கண்ணகி வழக்காடித் தன் கணவன் கள்வன் அல்லன் என்று நிருபித்தலும், தவறு உணர்ந்த மன்னன் உடன் உயிர் நீத்ததும், கண்ணகி மதுரையை எரித்துவிட்டுச் சேரநாடு புகுந்து விண்ணுக்குச் சென்றதும் விளக்கப்பட்டுள்ளன. வஞ்சிக் காண்டத்தில் கண்ணகியின் கதையுணர்ந்த சேரன் செங்குட்டுவன் அவளுக்குச் சிறப்பு செய்ய, கனகவிசயரை வென்று, இமயம் சென்று அவர் தலைமேல் கல் ஏற்றிக் கொணர்ந்து, வஞ்சி நகரில் கோயில் கட்டி விழாக் கொண்டாடிய செய்திகள் விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன.

உலகக் காப்பியங்கள் எல்லாம் அரச குடும்பத்தாரையே தலைவர் களாகக் கொண்டிருக்க, இளங்கோ தம் காப்பியத்தில் குடிமக்களாகிய வணிகர் குடும்பத்தைத் தேர்ந்தெடுத்தது ஒரு புதுமையே.

பத்தினிகள் பெண்ணைத் தெய்வமாக்கி வழிபடும் வழக்கத்திற்குக் கால்கோள் செய்தவர் இளங்கோவடிகளார். சமுதாயத்தில் பழித்துக் கூறப்படும் கணிகையாகிய மாதவி காப்பியத்தில் சிறப்பிடம் பெறுவதும் வரவேற்கத் தகுந்த மாற்றமாகும்.

ஒரு காப்பியம் சுவையாக அமைய நல்ல கதைத் தலைவனுக்கு நேர்மாறான பொல்லாதவரையும் படைத்து முரண்பட காட்ட வேண்டும். ஆனால் அப்படி ஒருவன் இல்லாமலே இக்காப்பியம் இனிப்பதாக டாக்டர்.மு.வ. கூறுகிறார். இதுவும் ஒரு புதுமையே.

தமிழ்நாடு மூன்று பிரிவாகச் சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் தனித்தனியே ஆளப்பட்டு வந்தபோது அவர்களுக்குள் போரும் பகையும் இருந்தன. அந்த நிலையில் மூன்று நாடுகளையும் மூன்று அரசர்களையும் புகழ்ந்து ஒருமை நோக்கம் உடையவராய் இளங்கோ இக்காப்பியத்தை இயற்றியுள்ளார். சோழ நாட்டில் தொடங்கிய கதை பாண்டிய நாட்டில் வளர்ந்து சேர நாட்டில் நிறைவடைகிறது.

இளங்கோ சமணராக இருந்தாலும் எல்லாச் சமயங்களையும் ஏற்றுச் சமய ஒருமைப்பாட்டைக் காட்டி உள்ளார். தமிழர் தம் வாழ்வில்

Scanned by CamScanner

கண்ட கலைகளையெல்லாம் தம் காப்பியத்தில் கலந்து வைத்துள்ளார். அரங்கேற்றுக் காதையில் ஆடல்கலைக் குறிப்புகளையும், கானல் வரியில் இசை நுணுக்கங்களையும் இணைத்துக் தம்மை ஒரு கலைஞராக வெளிப்படுத்தியுள்ளார் இளங்கோவடிகள்.

நாட்டுப் பாடல்களைத் தழுவிக் கானல் வரியிலும், ஆய்ச்சியர் குரவையிலும் குன்றக் குரவையிலும் அமைந்துள்ள புதிய செய்யுள் வடிவங்கள் சுவை நிரம்பியவை. இவை தமிழிலக்கியத்திற்குப் புதிய வரவு.

மாதவி எழுதுவதாக வரும் இரு மடல்களில், இரண்டாவது மடல் இளங்கோவின் சொல் ஆட்சித் திறனைப் புலப்படுத்துகிறது. மாதவியிட மிருந்து தனக்கு வந்த அந்த மடலைக் கோவலன் அப்படியே தன் தந்தைக்கு அனுப்பும் வகையில் மடல் அமைந்திருக்கிறது.

"அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி அன்றியும் குலப்பிறப்பு ஆட்டியோடு
இரவிடைக் கழிதற்கு, என் பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி" (சிலம்பு 2:12:86-91)

இளங்கோவடிகள் தம் உள்ளத்து உணர்ச்சியை இயற்கையோடு ஏற்றிச் சொல்லும் இடங்கள் இதயத்தை உருக்குவனவாக அமைந்து விடுகின்றன. கண்ணகிக்கு நேரப் போகும் துன்பத்தை வையை நதி அறிந்து அதை வெளிக்காட்டாமல் அடக்க முயன்றதாக வரும் பகுதியை இதற்குச் சான்றாக்கலாம்.

"வையை என்னும் பொய்யாக் குலக்கொடி
தையற்கு உறுவது தான்அறிந் தனள் போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்நிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி"

என்பது அது. அனைத்திற்கும் மேலாக இளங்கோவடிகளுக்கு இருந்த தமிழ்ப் பற்றும் நூல் முழுமையும் விரவியுள்ளது.

**நூலின் காலம்:**

சேரன் செங்குட்டுவன் வாழ்ந்த காலமே இளங்கோ வாழ்ந்த காலமாகும். சேரன் செங்குட்டுவன் நடத்திய கண்ணகி விழாவுக்குக் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இலங்கை கயவாகு மன்னன் வந்திருந்தார் என்ற செய்தியை, இலங்கை வரலாற்று நூலான மகாவம்சம் கூறுகிறது.

Scanned by CamScanner

சேரன் செங்குட்டுவன் செய்த வடநாட்டுப் போரில் நூற்றுவர் கன்னர் என்ற சதகர்ணி துணை செய்ததாகச் சிலம்பு கூறுகிறது. சதகர்ணி காலம் கி.பி.166க்கு மேற்பட்டது என்று வரலாறு காட்டுகிறது.

சிலம்பு, சங்க இலக்கியத் திணைகளையும், யாப்பினையும் பெரும்பாலும் கொண்டிருக்கிறது. சமயச் செய்திகள் இருந்தாலும் சமயச் சண்டைகள் இல்லாத சூழ்நிலை காட்டப்பட்டுள்ளது. இத்தகைய காரணங்களால் இந்நூல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

## 2. மணிமேகலை

இதுவும் முப்பது காதைகளில் கதையைச் சொல்கிறது. மணி மேகலை பருவம் எய்திய போது குலவழக்கப்படி அவள் நாட்டியம் கற்றுப் பரத்தையாக வாழவேண்டுமென்று பாட்டி விரும்பினாள். ஆனால் மாதவி தன் மகள் குலத்தொழில் செய்யக்கூடாது என்று உறுதி பூண்டு, அவளைச் சமயத்தொண்டுக்கு ஆளாக்கினாள். மணி மேகலையைக் கண்ணகியின் மகளென்றே சொல்லி வந்தாள் மாதவி.

### காப்பிய அமைப்பு

துறவில் ஈடுபட்ட மணிமேகலையின் அழகில் ஈடுபட்டு காதல் கொண்ட சோழநாட்டு இளவரசன் உதயகுமாரன் அவளையே பின் தொடர்ந்தான். அப்போது குலதெய்வம் அவளைக் காப்பாற்றி மணி பல்லவத்தீவிற்கு அழைத்துச் சென்றது. அங்குப் புத்த பீடிகையைத் தொழுது, பழம் பிறப்பு உணர்ந்து, கோமுகிப் பொய்கையில் அமுதசுரபி என்னும் பாத்திரம் பெற்றுப் பசிப்பிணியைப் போக்க பயணம் தொடர்ந்தாள். அவளைப் பின் தொடர்ந்த உதயகுமாரன் காயசண்டிகையின் கணவனால் வெட்டுண்டு இறக்க, மணிமேகலை சிறைப்பட்டு பின்பு விடுதலை பெற்றாள். வஞ்சி மாநகரம் சென்று சமய வாதத்தில் வெற்றி பெற்றாள். அறநெறிகளை அனைவருக்கும் எடுத்துச் சொல்லி முடிவில் முக்தி பெற்றாள்.

### நூலின் சிறப்புகள்

மதுரை கூலவாணிகன் சாத்தனார் இக்காப்பியத்தைப் படைத்தார். பௌத்த சமயக் கருத்துக்களை விளக்குவதே ஆசிரியரின் முதல் நோக்கமாகிவிட்டதால் காப்பிய இலக்கணமும், இலக்கியச் சுவையும் இதில் இரண்டாம் இடத்தையே பெறுகின்றன. எனவே முழுதும் இது

Scanned by CamScanner

ஒரு சமயக் காப்பியமாகவே செய்யப்பட்டுள்ளது. பரத்தையர் குலத்தில் பிறந்தவளைப் பெருங்காப்பியத்தின் தலைவியாக்கிப் பெருமை பெறச் செய்துவிட்டார் சாத்தனார்.

"மணிமேகலை என்னும் காப்பியத்தைவிட அந்த நூலில் வரும் மணிமேகலை என்னும் பெண் துறவியே பலருடைய போற்றுதலுக்கு உரியவளாய் விளங்குகிறாள். அழகும் இளமையும், அறிவும், பண்பும் நிரம்பிய அவள் அரசிளங்குமாரனுடைய காதலைக் கைவிட்டுப் பௌத்தத் துறவியான சிறப்பு ஒரு புறம். அதைவிடப் பெரியது அவள் அருள் நிரம்பிய வாழ்வு நடத்திய சிறப்பாகும்" என்று மு.வ. குறிப்பிடுகிறார்.

"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்லை"

என்று மணிமேகலை கூறியும், அதே வழியில் பசிப்பிணி போக்கியும் வாழ்ந்த வாழ்வு மிகவும் உயர்ந்தது.

மகன் உதயகுமாரனை இழந்த சோழ அரசி முதலில் மணிமேகலைக் குத் துன்பங்கள் பல செய்தாள். பிறகு உண்மையை உணர்ந்து மணிமேகலையை வணங்கினாள். மகனை இழந்து வருந்திய அரசிக்கு மணிமேகலை வாழ்வின் உண்மையை எடுத்துரைத்தாள்.

"அரசியே! நீ உன் மகன் உடலுக்காக அழுகிறாயா? உயிருக்காக அழுகிறாயா? உடலுக்காக அழுகிறாய் என்றால் உன் மகனை எடுத்துச் சென்று இடுகாட்டில் இட்டவர் யார்? உயிருக்காக அழுகின்றாய் என்றால், உயிர்ப்போய் புகும் இடம் அவரவர் செய்த வினைக்கு ஏற்ற வாறு அமைவன; தெரிந்து கொள்ள இயலாதது அது. உன் மகனுடைய உயிருக்காக அன்பு செலுத்துகிறாய் என்றால், நீ எந்த உயிருக்காகவும் பொதுவாக இரக்கம் கொள்வதே கடமை ஆகும் என்று எடுத்துரைத்தாள். மது ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சிறை ஒழிப்பு போன்ற சீர்திருத்தக் கருத்துக் களையும் இக்காப்பியம் கூறுகிறது. ஆசிரியப்பாவைக் கையாண்டு எளிய நடையில் இக்காப்பியத்தைப் படைத்துள்ளார்.

தமிழகத்தில் தலைசிறந்த புகார், வஞ்சி, காஞ்சி ஆகிய நகரங்களில் கதை நிகழ்ந்த போதும் மக்கள் வாழ்க்கையை எடுத்துக்காட்டும் முயற்சி ஆசிரியருக்கு இல்லாது போயிருக்கிறது. எங்கும் புத்தர் பெருமானின் அறிவுரைகளை அள்ளித் தெளித்து இதை ஒரு சமயக் காப்பியமாகவே சமைத்துள்ளார். பௌத்தக் கொள்கையைக் கூறும் இந்நூல் சங்க

Scanned by CamScanner

காலத்திற்குப் பின்னரே தோன்றியிருக்க வேண்டும். சிலப்பதிகாரத் திற்குப் பின்னர் மணிமேகலை நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதே பலரின் கருத்து.

### 3. சீவக சிந்தாமணி

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் திருத்தக்கத்தேவர் என்னும் சமண முனிவர் சீவகசிந்தாமணி என்னும் காப்பியத்தை இயற்றினார்.

விருத்தம் எனப்படும் புதுச்செய்யுள் வகையைப் புகுத்திப் புதுமை செய்த பெருமை இவரைச் சாரும். ஏற்கனவே சிலப்பதிகாரத்தில் விருத்தம் காணப்பட்ட போதிலும் அதை நன்கு பயன்படுத்தி வெற்றி கொண்டவர் திருத்தக்கத் தேவரே. மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்ட ஒரு பெரிய காப்பியம் விருத்தப்பாக்களாலே விளைந்தது. பின்னால் தோன்றிய சேக்கிழாரும், கம்பரும், கச்சியப்பரும் இதையே கையாண்டு பெருவெற்றி பெற்றார்கள்.

இக்காப்பியம் 13 இலம்பகங்களில் (பிரிவு)3145 பாடல்களைக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன் விசயை என்பவளை மணந்தான். அவள் அழகில் மயங்கி ஆட்சியைக் கட்டியங்காரனிடம் ஒப்படைத்தான். அவன் அரசனையே கொல்லத் திட்டமிட்டான். அந்நிலையில் விசயை மயில்பொறி ஒன்றில் தப்பிச் சென்று சுடுகாட்டில் சீவகனைப் பெற்றெடுத்தாள். சீவகன் கந்துக்கடன் என்பவன் வீட்டில் வளர்ந்தான். தக்க வயதில் ஆநிரையை மீட்டுக் காந்தருவதத்தை என்பவளை வீணைப் போரில் வென்று மணந்தான். குணமாலை, பதுமகேசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி ஆகிய பெண்களையும் மாமன் மகளையும் மணந்து கொண்டான். கட்டியங் காரனைக் கொன்று நாட்டை மீட்டு ஆட்சி நடத்தினான். இறுதியில் துறவு பூண்டு முத்திபெற்றான் என்பதுதான் காப்பியக் கதையாகும்.

சீவகன் எட்டுப் பெண்களை மணந்து கொண்டதாலும், அவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் ஒவ்வொரு இலம்பகம் பாடப்பட்டி ருப்பதாலும் இதற்கு மணநூல் என்ற பெயர் உண்டு. இறுதியில் சீவகன் சமணசமயக் கொள்கையின்படி துறவு பூண்டு முத்தி பெறுவதால் முத்திநூல் என்றும் இதைக்கூறுவர்.

சமணத்துறவி ஒருவர் தம் சமயக் கொள்கையை வலியுறுத்தி இயற்றிய நூலாக இருந்தபோதிலும் இலக்கியச் சுவைக்காக மற்ற சமயத்தைச் சார்ந்தவர்களும் இதில் ஈடுபாடு காட்டியிருக்கின்றனர். தமிழ்

Scanned by CamScanner

மரபுகளைத் தம் காப்பியத்தில் தவழவிட்டிருக்கிறார் ஆசிரியர். ஆநிரை மீட்டல், கட்டியங்காரனுடன் நிகழ்த்திய போர் முதலானவற்றில் தமிழ்ப் போர்முறைகளே காட்டப்பெற்றுள்ளன.

திருமணச் செய்திகளில் தமிழ் அகப்பொருள் புதிய கற்பனைகளுடன் மீண்டும் மலர்ந்ததையும் இதில் காணலாம். யாழ்ப்போட்டி இசைக் கலைக்கோர் எடுத்துக்காட்டு. இது தவிர யானையேற்றம், பந்தாடல் போன்ற பல கலைகளைப் பற்றிய பார்வை இக்காப்பியத்தில் பதிவாகியுள்ளது. சங்க இலக்கிய இயற்கை அழகும் தமிழ் இலக்கிய நயமும் இக்காப்பிய வெற்றிக்கான காரணங்களாய் உள்ளன.

பழைய மரபில் நின்று பாடியதோடல்லாமல் புதிய கற்பனைகளையும் வருணனைகளையும் வடித்துத் தம் காப்பியத்தைக் காலத்தால் அழியாததாகச் செய்துவிட்டார் திருத்தக்கத்தேவர்.

## 4. வளையாபதி

வளையாபதி என்னும் சமணக் காப்பியம் இப்போது கிடைக்கவில்லை. உரையாசிரியர்கள் இதன் பாட்டுக்களை மேற்கோளாகக் காட்டுவதால் அவர்கள் காலத்தில் இந்நூல் சிறப்பாக விளங்கியது எனத் தெரிகிறது. 70 செய்யுள்கள் மட்டுமே இப்போது கிடைக்கின்றன. இந்நூலும் அழகான விருத்தப்பாக்களால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் கிடைத்துள்ள பாடல்கள் உறுதி செய்கின்றன.

நூலாசிரியர் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

நவகோடி நாராயணன் என்ற வணிகன் வேறு குலப்பெண்ணை மணந்து உற்றார் வெறுப்பிற்குப் பயந்து அவளைக் கைவிட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு வணிகப் பெண்ணை மணந்து வாழ்ந்து வந்தான். கைவிடப்பட்ட காரிகையின் வயிற்றில் பிறந்த மகன் வளர்ந்து தந்தையைத் தேடிப்பிடித்து வணிகச் சான்றோரின் ஆதரவைத் தேடினான். அவர்கள் இவன் வணிகன் மகனே என்று வழக்கில் தீர்ப்பு வழங்கினர். தாயையும் தந்தையையும் சேர்த்து வைத்தான் என்பதுதான் கதை.

## 5. குண்டலகேசி

இது ஒரு பௌத்தசமய காப்பியம். இப்போது 19 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. பிற பாடல்கள் பற்றி அறிய முடியவில்லை என்றாலும் இதற்கு எதிர்ப்பாகத் தோன்றிய நீலகேசியும் அதன் உரையும் இதனைப் பற்றிய சில குறிப்புகளைக் கொண்டுள்ளன.

Scanned by CamScanner

குண்டலகேசி என்னும் வணிகப் பெண்ணே காப்பியத்தின் தலைவி. சிறைப்பட்டுக் கொலைக்களம் நோக்கிச் சென்ற கள்வனான காளன் என்பவனைக் கண்டு காதல் கொண்டாள். அவள் தந்தை அதை அறிந்து அரசனிடம் சென்று காளனை விடுவித்துத் தன் மகளுக்கு அவனைத் திருமணம் செய்து வைத்தான்.

மலையுச்சிக்கு அழைத்துச் சென்று கொல்ல முயன்ற கணவனை, 'உம்மைச் சுற்றி வந்து வணங்கிப் பின் சாவேன்' என்று கூறி வலம் வருகையில் அவனைக் கீழே தள்ளிக் கொன்றுவிட்டாள். பின்னர் மனம் வெறுப்புற்று வாழ்வைத் துறந்து புத்தமதம் புகுந்து சமணத்தை எதிர்த்துப் புத்தசமயக் கொள்கையைப் பரப்பினாள்.

இதை இயற்றியவர் நாதகுத்தனார் என்னும் பௌத்தர். சமண சமயக் கொள்கைகளை மறுப்பதற்காகவே அவர் இதை இயற்றினார் என்று அறிகிறோம்.

## (ஆ) ஐஞ்சிறுகாப்பியங்கள்

### 1. நீலகேசி

குண்டலகேசி என்னும் பௌத்த காப்பியத்திற்கு எதிராக எழுதப் பட்ட சமண நூல் இது. இதன் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. இந்நூல் பத்துச் சருக்கங்களாய் (பகுதி) 894 பாடல்களைக் கொண்டதாய் உள்ளது. இதில் வரும் நீலி என்னும் பெண் சமண முனிவர் ஒருவரின் மாணவி ஆகிறாள். அவள் குண்டலகேசியை எதிர்த்து வாதிட்டுத் தோல்வியுறச் செய்கிறாள். பௌத்த பிட்சுகளின் ஒழுக்கக்கேடு பற்றி எடுத்துச் சொல்லி வாதம் செய்கிறாள். நூல் முழுவதும் பிற சமய எதிர்ப்பும் சமண சமயப் போற்றுதலுமாகவே அமைந்துள்ள இந்நூலில் இலக்கியச் சிறப்பு இல்லை.

### 2. சூளாமணி

இக்காப்பியத்தை இயற்றியவர் தோலாமொழித்தேவர். சீவக சிந்தாமணிக்கு அடுத்ததாக இச்சமணக் காப்பியம் போற்றப்படுகிறது. இந்நூல் பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது என்பர். இது பன்னிரண்டு காண்டங்களாய் 2230 விருத்தப்பாக்களைக் கொண்டுள்ளது. வடமொழிச் சமண நூலில் உள்ள திவிட்டன், விசயன் என்பவரின் கதையை விளக்கும் காப்பியம் இது. இந்நூலின் முடிவில் துறவும் முத்தியும் பேசப்படுகின்றன.

Scanned by CamScanner

### 3. உதயணகுமார காவியம்

இந்நூல் உதயணன் கதை என்றும் வழங்குகிறது. வங்கதேசத்து அரசன் உதயணன் கதையினை விருத்தப்பாவில் கூறுகிறது. ஆறு காண்டங்களும் 367 செய்யுள்களும் இந்நூலில் உள்ளன. இந்நூல் காப்பிய அமைதி உடையதன்று எனக் கூறுவர்.

### 4. யசோதர காவியம்

330 விருத்தப்பாக்கள் கொண்ட இந்நூல் ஒரு சமண நூலாகும். உயிர்க் கொலை கூடாது என்னும் கருத்து இதில் வலியுறுத்தப்படுகிறது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

### 5. நாககுமார காவியம்

மற்றொரு சமணநூல் இது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நாக குமாரன் வரலாற்றை, ஐந்து சருக்கங்களில் 170 விருத்தங்களால் பாடிய நூல் இது. மேற்சொன்ன நூல்களைப் பெருங்காப்பியங்கள் என்றும், சிறு காப்பியங்கள் என்றும் பிற்கால அறிஞர் பாகுபாடு செய்ய விரும்பினர்.

இப்பாகுபாட்டிற்குத் தக்க காரணங்கள் இல்லை. (ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்துமே சமண நூல்களாகும்)

சிந்தாமணியை ஒத்த இடம் பெறத் தகுதியான சூளாமணியைச் சிறுகாப்பியம் என்று அமைத்தது பொருத்தமில்லை. சமயவாதம் மிகுந்த குண்டலகேசியைப் பெருங்காப்பியத்துள் சேர்த்ததும் பொருத்தமாகத் தோன்றவில்லை.

"பிற்காலத்து அறிஞர் எவரோ செய்த இந்தப் பாகுபாடு புறக்கணிக்கத் தக்கதே" என்று கருத்துரைக்கிறார் மு. வரதராசனார்.

## (இ) பிற காப்பியங்களும் புராணங்களும்

### 1. பெருங்கதை

இது உதயணன் என்னும் வடநாட்டு அரசனுடைய வரலாற்றைக் கூறும் காப்பியமாகும். இதனைப் பாடியவர் கொங்குவேளிர். இவர் ஒரு சமணர். அரச குடும்பத்தைச் சார்ந்தவர். குணாட்டியர் பைசாச மொழியில் எழுதிய பிருகத் கதையினை மூலமாகக் கொண்டு தமிழில் பெருங் காப்பியம் செய்தார்.

இக்காப்பியம் உஞ்சைக் காண்டம், இலாவணக் காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் என்னும் ஐந்து காண்ட

Scanned by CamScanner

களை உடையது. காண்டம் தோறும் காதைகள் ஏன்கிற உட்பிரிவுகள் உள்ளன. 99 காதைகளைக் கொண்டுள்ளது இக்காப்பியம். இதன் முன்பின் பகுதிகள் கிடைக்கவில்லை.

**காப்பியம் கூறும் கதை**

கௌசாம்பி என்னும் மன்னனின் மனைவி கருவுற்றிருந்தாள். அவள் தூங்கிக் கொண்டிருந்த போது சிம்புள் பறவை அவளை எடுத்துச் சென்று ஒரு மலையடிவாரத்தில் போட்டுவிட்டது. அங்கு அரசி உதயணனைப் பெற்றெடுத்தாள். தவம் செய்யச் சென்றிருந்த அவள் தந்தை அங்கு வந்து அவர்களை வளர்த்தார். உதயணன் மற்றொரு முனிவரின் மகனான யூகி என்பவனோடு வளர்ந்து தன் பாட்டனிடம் போர்ப்பயிற்சியும் மற்றும் பல கலைகளையும் கற்று யாழிசையிலும் வல்லவனானான். யாழிசையால் யானையை வசப்படுத்தி அதன் துணையுடன் தந்தை நாட்டை மீட்டுக் கொண்டான். தனக்கு முன் யானைக்கு உணவு ஊட்டுவதான ஒப்பந்தம் தவறியபோது யானை மறைந்தது. அதைத் தேடிச் சென்ற உதயணன் பசையினி மன்னனால் சிறை செய்யப்பட்டான். யூகியின் உதவியாலும் தந்திரத்தாலும் சிறை மீண்டான். உச்சையினி மன்னனின் மதயானையை அடக்கி அவன் மகள் வாசவதத்தையை மணந்து இன்பவாழ்வில் மயங்கியிருந்தான். யூகி வாசவதத்தையை அவனிடம் இருந்து பிரித்து அவள் இறந்ததாகச் செய்தி பரப்பினான். இறந்தோரை உயிர்ப்பிக்கும் முனிவர் ஒருவரைத் தேடிச் சென்ற உதயணன் பத்மாவதியை மணந்து இரு மனைவியரோடும் கௌசாம்பியை ஆண்டான். மேலும் இரு மங்கையரை மணம் செய்து கொண்டான். முடிவில் பத்மாவதியின் மகனான கோமுகனுக்கு அரசை அளித்துவிட்டுத் துறவு பூண்டான்.

மூலநூலில் உள்ளவாறு இக்காப்பியம் கதையினையும், நிகழ்ச்சி களையும் கொண்டிருப்பதால் இது ஒரு மொழி பெயர்ப்புக் காப்பியம் போல் அமைந்துள்ளது. சமண சமயக் கருத்துக்கள் நூலில் பரவலாகக் காணப்படுகின்றன. பெருங்காப்பிய இலக்கணங்களுடன் சொற்சுவை, பொருட்சுவை கொண்டு இலங்குகிறது. அரசனுக்குரிய கடமைகள், அரசியல் சூழ்நிலைகள், தியாக உணர்வு ஆகியவை சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

**காலம்**

கொங்குவேளிர் வச்சிர நந்தி கி.பி. 470 இல் அமைத்த சமணத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராய் இருந்திருக்கக்கூடும். அப்படி இருப்பின் பெருங்கதை கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றியிருக்க வேண்டும்.

Scanned by CamScanner

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் உதயணன் கதையான பெருங்கதை இடைச்சங்கத்து நூல்களை ஆய்ந்து செய்யப் பட்டது என்கிறார். ஆனால் அதற்குரிய சான்றுகள் இல்லை. எனவே, சரியான காலவரையறை இக்காப்பியத்திற்குக் கிடைக்கவில்லை.

## 2. பெரிய புராணம்

சேக்கிழாரால் பாடப்பெற்ற பெருங்காப்பியமே பெரியபுராணம். இவர் தொண்டைநாட்டுக் குன்றத்தூரில் பிறந்தவர். அருண்மொழித் தேவர் என்பது இவரது இயற்பெயர். சோழ அரசன் இரண்டாம் குலோத் துங்கனுக்கு (1133-1150) அமைச்சராய் விளங்கி உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டம் பெற்றார். பெரிய புராணம் இயற்றித் தொண்டர்சீர்பரவுவார் என்ற பட்டம் பெற்றார். சைவ சமயத் தொண்டுக் காகவே தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். இவருடைய காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சுந்தரர் அறுபத்து மூன்று நாயன்மார் களைப் பதினொரு பாடல்களில் அமைத்துத் திருத்தொண்டர் தொகையைப் பாடினார். பிறகு வந்த நம்பியாண்டார் நம்பி என்பவர் அந்த நாயன்மார்கள் வாழ்க்கை பற்றிய குறிப்புகளை மட்டும் அமைத்துத் திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் சிறு நூல் செய்தார். சேக்கிழார் இந்த இருவரின் குறிப்புகளை விரிவுபடுத்தி நாயன்மார்களின் வரலாற்றைப் பதின்மூன்று சருக்கங்கள் அடங்கிய 4286 விருத்தப் பாக்களால் பாடியிருக்கிறார். 'திருத்தொண்டர் மாக்கதை' என்பதே சேக்கிழார் அமைத்த பெயர்.

கயிலாயத்திலிருந்த சுந்தரர் உலகில் பிறந்து வளர்ந்து பரவை யாரையும் சங்கிலியாரையும் மணந்து வாழ்ந்து மீண்டும் கயிலைக்குச் செல்லும் வரலாற்றை நூலின் முதலிலும், இடையிலும் முடிவிலுமாக அமைத்து அடியார் பிறர் வரலாறுகளை இடை இடையே கூறி யிருப்பதால் சுந்தரரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு காப்பிய இலக்கணப்படி அமைந்த பெருங்காப்பியம் என்பர். இக்காப்பியம் 'உலகெலாம்' என்று தொடங்கி 'உலகெலாம்' என்றே முடிவு பெற்றிருப்பது சேக்கிழாரின் புலமைக்குச் சான்றாகும்.

முன்னைய காப்பியக் கதைகள் எல்லாம் பெரும்பாலும் வட மொழிக் கதையின் தழுவல்களே. சிலம்பும், மேகலையும் கற்பனை கலந்த வரலாற்றுக் கதைகளாக உள்ளன. பெரிய புராணமோ தமிழகத்தில்

Scanned by CamScanner

வாழ்ந்த சிவனடியார்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் வரலாற்றுக் காப்பியமாக உள்ளது.

இதன் சிறப்புக் கருதி 'தேசிய காப்பியம்' என்று வழங்குவர்.

சேக்கிழார் வரலாற்று உண்மை மாறாமல் காப்பியம் இயற்றப் பெருமுயற்சி செய்துள்ளார். நாயன்மார்கள் வாழ்ந்த இடங்களுக் கெல்லாம் நேரில் சென்று முன்னோர் தொகுத்து வைத்திருந்த செய்தி களையும் செவிவழிச் செய்திகளையும் சீர்தூக்கி ஆராய்ந்து வரலாற்று உண்மைக்கு மாறுபடாமல் பாடியுள்ளார்.

பெரியபுராணத்தில் துறவிகள், இல்லறத்தோர், நாட்டு மன்னர், காட்டு வேடன், உயர்குலத்தோர், தாழ்குலத்தோர் முதலான பல்வேறு நிலைகளில் உள்ளவர்களின் வாழ்க்கை வரலாறுகள் வேறுபாடின்றிப் பாடப்பெற்றுள்ளன. தேவாரம் பாடிய பெருமக்களின் வரலாற்றைக் கூறுங்கால் எவ்வெவ் விடங்களில் எவ்வெவ் வேளையில் பாடப் பெற்றன என்ற வரலாற்று உண்மைகளையும் நுணுக்கமாகக் கண்டு ஆய்ந்து பாடியிருக்கிறார்.

பெரிய புராணத்தில் இடம் பெறும் தனியடியார் அறுபத்து மூவர் தொகையடியார் ஒன்பது பேர். இந்நாயன்மார்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை வாழ்ந்தவர்கள். பெரிய புராணத்தைக் கேட்டு மகிழ்ந்த சோழன் சேக்கிழாரைச் சிறப்பித்தான். அலங்கரித்த யானையின்மேல் பெரியபுராண ஏட்டுச்சுவடியை ஏற்றி அதனருகே சேக்கிழாரையும் அமரச் செய்து திருவீதி வலம் வரச் செய்தான் அநபாயன். அத்துடன் தானும் யானை மேலிருந்து காப்பியக் கோமானுக்குத் தன் கையினாலேயே வெண்சாமரை வீசி மகிழ்ந்தான்.

**சேக்கிழாரின் காப்பிய மாண்பு**

சேக்கிழாரின் வாழ்க்கை மிகப் பண்பட்ட வாழ்க்கையாக அமைந்தி ருந்தது. தம் நூலில் கொலை முதலிய தீமைகளைக் கூற வேண்டிய இடங்களில் அவற்றைக் குறிப்பிட மனம் கூசுகின்ற அளவிற்கு அன்பு நிரம்பிய நெஞ்சம் படைத்த சான்றோர் அவர். நாயன்மார் ஒவ்வொரு வரைக் குறித்தபோதும் ஆண் ஆயினும், பெண் ஆயினும் அவர் என்றே மதிப்புப் பன்மைச் சொல்லால் குறிப்பிட்டுள்ளார்.

அடியார்களின் அன்பை விளக்கும் இடங்களில் சேக்கிழாரின் சொற்கள் மேன்மை பெற்று விளங்குகின்றன.

Scanned by CamScanner

காரைக்கால் அம்மையார் இறைவனிடம் வரம் கேட்ட செய்தியைக் கூட உருக்கத்துடனும் பண்பாட்டுடனும் சேக்கிழார் படம் பிடிக்கிறார்.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும் நாள் மகிழ்ந்து பாடி,
அறவா நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்"
(பெரிய. காரைக். 60)

இயற்கை வருண்னைகளிலும், மற்ற வருணனைகளிலும் பக்திச் சுவையே மேலிட்டு விளங்குகிறது. வயலில் விரிந்து அசையும் நெற் கதிர்கள் சிவனடியாரின் மனம்போல் மலர்ந்து அழகாக உள்ளனவாம். முற்றிய நிலையில் அந்த நெற்கதிர்கள் தலைசாய்ந்து தோன்றும் காட்சி, சிவனடியார்கள் கூடியிருக்கும் போது ஒருவரை ஒருவர் வணங்கிப் பக்தி செலுத்துவது போல உள்ளதாம்.

குளிர்காலத்தில் பனிசூழ்ந்து குன்றுகளை மூடியிருக்கும் காட்சி குளிருக்காகக் குன்றுகளும், வெண்ணிறமான போர்வை போர்த்திக் கொண்டிருப்பது போல உள்ளதாம். குளிரும் பனியும் மிகுந்தபடியால் தன் கைகளை நீட்டி நிமிர்க்க முடியாதவன் போல் சூரியன் மெல்ல கதிர்களை விரித்து மூடிக்கொள்கின்றானாம். அதனால் வெயில் தோன்றித் தோன்றி மறைகிறதாம்.

இவ்வாறு எளிய சொற்களால் உவமைகளும், வருணனைகளும் அமைந்திருப்பதைக் காப்பியத்தில் காணலாம். 'பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று சேக்கிழாரை மீனாட்சி சுந்தரம்பிள்ளை பாராட்டியுள்ளது மிகவும் சரியே.

### 3. கம்பராமாயணம்

வடமொழியில் வால்மீகி பாடிய இராமாயணத்தைக் கம்பர் தமிழில் பாடினார். ஆகவே அது கம்பராமாயணம் என அழைக்கப்படுகிறது. கம்பர் சோழ நாட்டிலுள்ள திருவழுந்தூரில் பிறந்தார் என்று கூறுவர். திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றார். இவர் பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் வாழ்ந்தார் என்பர் சிலர்.

இராமாயணக் கதை சங்க காலத்திலேயே தமிழ் மக்களிடையே பரவி இருந்தது என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் காட்டுகின்றன. அவற்றிற்குப் பின் சிலப்பதிகாரம் மற்றும் ஆழ்வார்களின் பாசுரங்களில்

Scanned by CamScanner

இராமாயணச் சுருக்கமும், அரிய செயல்கள் பற்றிய குறிப்புகளும், கற்பனைகளும் பல உள்ளன.

கம்பர் தாம் பாடிய இராமாயணத்திற்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார். பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரையிலுள்ள ஆறு காண்டங்களையும் பல படலங்களாகப் பகுத்து 10500 விருத்தப் பாக்களால் பாடியுள்ளார்.

**வால்மீகியும் கம்பரும்**

வால்மீகி இராமாயணத்தில் உள்ள பலவற்றைக் கம்பர் தம் காவியத்தில் அவ்வாறே தந்துள்ளார். சிலவற்றை விரித்துள்ளார். வால்மீகி சொல்லாத சிலவற்றைத் தாமே படைத்துக் காட்டியுள்ளார். வால்மீகியின் உத்தரகாண்டத்தைக் கம்பர் தம் காவியத்தில் படைக்க வில்லை. தமிழ்ப்பண்பிற்கு இசையுமாறு மங்கல விழாவோடுமுடித்தலே சிறப்பு என்று கருதி உத்திரகாண்டத்தை விட்டுவிட்டார் என எண்ணத் தோன்றுகிறது.

வாலியின் மகன் அங்கதனைப் பற்றி வால்மீகி சொல்லாத முறையில் கம்பர் சொல்லியுள்ளார். அங்கதன் அடைக்கலம் கம்பரின் புதிய படைப்பு. கம்பரின் மாயாசனகப் படலம் வால்மீகி நூலில் இல்லாதது.

வாலி இறந்த பிறகு அவனுடைய மனைவி தாரையைச் சுக்கிரீவன் தன் மனைவியாக்கிக் கொண்டான் என்பது வால்மீகி இராமாயணத்தில் உள்ள கதை. ஆனால் கம்பர் தம் நூலில், கணவனை இழந்த பின் தாரை, மங்கல அணி துறந்து துயரமே வடிவாக விதவை வாழ்வு நடத்துவதாகக் காட்டியுள்ளார்.

வால்மீகியின் இராமாயணத்தில் இரணியன் பற்றிய விளக்கம் இல்லை. கம்பர் அதை ஒரு தனிப்படலமாக எழுதியுள்ளார். சீதையும், இராமனும் திருமணத்திற்கு முன் கண்டு காதல் கொண்டதாக வால்மீகி கூறவில்லை. கம்பர் அவர்களின் திருமணத்தைக் காதல் மணமாக அமைத்துக் காட்டியுள்ளார். மிதிலை நகரத் தெருவழியே இராமன் நடந்து சென்றபோது கன்னிமாடத்தில் நின்றிருந்த சீதை அவனைக் கண்டாள் என்றும், இராமனும் அவளைக் கண்டான் என்றும் கூறி அவர்களுக்குள் காதல் வளர்ந்து வந்ததாக விளக்கியுள்ளார்.

இராவணன் சீதையைக் கைகளால் பற்றித் தூக்கிச் சென்றதாக வால்மீகி கூறியுள்ளார். சீதையின் உயர்வுக்கு ஓர் இழுக்குப் போல் அது தோன்றிய காரணத்தால், பஞ்ச வடியில் பர்ண சாலையில் இருந்த சீதையை அந்தக் குடிசை தரையோடு வருமாறு பெயர்த்து எடுத்துச் சென்று

Scanned by CamScanner

இலங்கையில் அசோக வனத்தில் சிறை வைத்தான் என்றும், அவளைத் தொடவில்லை என்றும் கம்பர் கூறியுள்ளார். இவ்வாறு கம்பரின் படைப்பு முக்கியமான சில இடங்களில் வேறுபட்டுச் செல்கிறது. வேறுபடும் இடங்கள் எல்லாம் கதைச் சுவையும் பண்பாட்டுச் சிறப்பும் மிகுந்து காணப்படுகின்றன.

**கற்பனை வளம்**

வால்மீகி சொல்லாதவற்றை விளக்கி அழகுபடுத்துவதிலும் கம்பர்க்குச் சிறப்பு உண்டு. வால்மீகி சொன்னவற்றைப் புதிய அழகோடு விளக்கிக் கூறுவதிலும் கம்பருக்குச் சிறப்பு உண்டு. மருத நிலத்தை வருணிக்கும்போது,

"தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைக் கண்விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கு மாதோ"

என்று ஒரு நாடக அரங்கையே நம்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். கோசல நாட்டு வளமான வாழ்வை,

"வண்மை யில்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை யில்லை நேர் செறுநர் இன்மையால்
உண்மை யில்லை பொய்யுரை இலாமையால்
ஒண்மை யில்லை பல்கேள்வி ஓங்கலால்."

என்று கூறுவது பொதுவாக நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிப் பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு பெரும்புலவர் கண்ட ஒப்பற்ற கற்பனைக் காட்சியாக உள்ளது. ஒரு நல்ல நாடு இப்படித்தான் இருத்தல் வேண்டும் என்ற அரசியல் ஞானி ஒருவர் வகுத்த நல்ல இலக்கணமாகவும் உள்ளது.

"எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை" என்று கூறும் கம்பர் ஒரு பொது உடைமை சமுதாயத்தையே எங்கும் காண வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கியிருக்கிறார்.

**சுவைபட விளக்குதல்**

கதையோடு நிகழ்ச்சிகளை விளக்குவதிலும் கம்பர் இணையற்றவராய் விளங்குகிறார். அனுமன் சீதையைக் கண்டு திரும்பி வந்து இராமனிடம் செய்தி கூறுகின்றான். சீதையைத் தான் கண்டதாக அனுமன் கூறும் பாடல்,

Scanned by CamScanner

"இற்பிறப்பு என்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்"

என்பதாகும். கதைப் போக்கிற்கும் பாத்திரத்திற்கும் இயைந்த வகையில் வளமான சந்தங்களைக் கம்பர் தம் காப்பியத்தில் வாரி இறைத்துள்ளார். இராமனின் உள்ளத்தைக் கவரும் எண்ணத்துடன் வரும் சூர்ப்பனகை யின் நடையையும், கவர்ச்சி தரும் மயக்கத்தையும் விளக்கும் பாட்டு பின்வருமாறு

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியள் ஆகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"

தமிழ்மொழியின் வளத்தை முழுமையாகப் பயன்படுத்திய பெருங் கவிஞருள் கம்பர் ஒருவராய்த் திகழ்கிறார். பாத்திரத்தின் தனித் தன்மையை நுட்பமுற ஒரே பாட்டில் சுருக்கியும் காட்டுவார். ஓராயிரம் பாட்டில் பெருக்கியும் காட்டுவார். இதனால் கம்பராமாயணம் உலகப் பெருங்காப்பியங்களுள் ஒன்றாக மதிக்கத்தக்க உயர்நிலையைப் பெற்றுள்ளது.

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தமென்னும் வெண்பாவிற்கு உயர் கம்பன், கல்வியில் சிறந்தவன் கம்பன், கம்பநாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே, கம்பன் பிறந்த தமிழ்நாடு முதலான புகழுரைகளுக்குப் பொருத்தமானவன் கம்பன் என்பதைக் கம்பராமாயணம் காட்டுகிறது. மேற்சொன்ன காப்பியங் களுள் சிலம்பும், மேகலையும் சங்கம் மருவிய காலத்தவை. சிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம் ஆகியவை சோழர் காலத்தைச் சார்ந்தவை.

## 4. கந்தபுராணம்

இந்நூல் சிவசங்கர சங்கிதை என்னும் வடநூலைத் தழுவி, ஆறுமுகக் கடவுளின் பிறப்பு, வள்ளித் திருமணம், சூரன் சம்காரம் முதலிய முருகனின் செயல்களை விரித்து 10346 செய்யுட்களில் ஆறு காண்டங்களாகக் கூறுகிறது.

இந்நூலைக் கச்சியப்பச் சிவாச்சாரியார் இயற்றியுள்ளார். சைவ சித்தாந்த கருத்துக்கள் பல இந்நூலில் ஆழமாக இடம்பெற்று விளங்கு கின்றன. தமிழகத்தில் மட்டுமின்றி யாழ்ப்பாணத்திலும் தமிழர்கள் அனைவரும் விரும்பிக் கற்கின்ற ஒரு நூல் கந்தபுராணமாகும்.

Scanned by CamScanner

முருகன் தமிழ்க்கடவுளே என்பதால் இக்கதை தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றிருக்கலாம். கச்சியப்பர் தமிழிலக்கிய மரபுகளை விடாமல் வருணனைகளுக்குக் கற்பனை மெருகூட்டிப் பாடியுள்ளார். கம்பராமாயணக் கதைக்கு இணையான கதைப் போக்கினை இந்நூல் எல்லா நிகழ்வுகளிலும் கொண்டு பிற புராணங்களைக் காட்டிலும் சிறந்து விளங்குவதனை ரா.பி.சேதுப்பிள்ளையும் பிறரும் குறிப்பிட்டுள்ளனர்.

## 5. நளவெண்பா

இதிகாச, புராணங்களில் உள்ள கிளைக் கதைகள் சிலவற்றைத் தனியே எடுத்து அவற்றையே காப்பியமாகப் பலர் தமிழில் செய்துள்ளனர். நளவெண்பா அத்தகைய காப்பியங்களுள் ஒன்று. இந்நூலை இயற்றியவர் புகழேந்தி. இலக்கியச்சுவை மிக்க பாடல்களை இந் நூலில் காணலாம்.

சுயம்வரத்தில் தமயந்தியை மணந்த நளன், தேவர் சூழ்ச்சியால் காதலியைக் காரிருளில் கைவிட்டுப் பிரிந்து மீண்டும் மனைவியோடு இணையும்நிலை வரை இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் காலம் கி.பி.13ஆம் நூற்றாண்டு என்பர். மகாபாரதத்தில் கூறப்பட்டிருக்கும் நளோபாக்கியானம் என்ற நளன் வரலாற்றையே புகழேந்தி தமிழில் படைத்தார். 'கேட்டாலும் இன்பம் கிடைக்கும் கண்டீர் கொண்ட கீர்த்தியோடு பாட்டாலுயர்ந்த புகழேந்தி' என்று படிக்காசுப் புலவர் புகழேந்திப் புலவரை தாம் இயற்றிய தொண்டை மண்டல சதகத்தில் புகழ்ந்துள்ளார்.

வெண்பா பாடுவதில் புகழேந்தி இணையற்றவர் என்பதை ஒரு பாட்டு காட்டும்.

> வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
> செயங் கொண்டான் விருத்தமென்னும்
> ஒண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா
> அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்
> கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்
> வசைபடக் காளமேகம்
> பண்பாக வுயர் சந்தம் படிக்காசு
> அலாதுஒருவர் பகரொ ணாதே.

நளவெண்பா, சுயம்வர காண்டம், கலித்தொடர் காண்டம், கலிநீங்கு காண்டம், ஆகிய மூன்று காண்டங்களும் 424 நேரிசை வெண்பாக்களும் கொண்டது. ஆசிரியர் இயற்கையை இனிதாகப் பாடுகிறார்.

Scanned by CamScanner

"மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லிகணை தெரிந்து மெய்காப்ப - முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது?"

சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசனைப் புகழ்ந்து இவர் பாடியுள்ளார். எனவே, இவர் பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்க வேண்டும்.

## 6. வில்லிபாரதம்

நாயக்கர் காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களுள் சிறந்த ஒன்றாகக் கருதப்படுவது வில்லிப்புத்தூராழ்வார் இயற்றிய பாரதமாகும். 4339 விருத்தப்பாக்களைக் கொண்டு விளங்கும் இந்நூல் ஆதிபருவம் முதலாகச் சௌபதிக பருவம் ஈறாகப் பத்துப்பருவங்களைக் கொண்டது. வடமொழியில் வியாசர் இயற்றிய மகாபாரதத்திலுள்ள பதினெட்டுப் பருவங்களுள் முதற்பத்து பருவங்களிலுள்ள கதையையே இவ்வாசிரியர் தன் நூலுக்குப் பொருளாக எடுத்துக் கொண்டு அதைச் சந்தம் நிறைந்த விருத்தப் பாக்களில் அமைத்துப் பாடியுள்ளார். இவர் சிறந்த திருமாலடியார். ஒவ்வொரு பருவத்திலும் தொடக்கத்தில் திருமாலுக்குக் கூறும் வணக்கமும் தற்சிறப்புப் பயிற்சி செய்தியும் இதனை உறுதிப்படுத்தும்.

வடமொழிப் புலமையும் தமிழ்மொழிப் புலமையும் ஒருங்கு வாய்க்கப் பெற்றவர்களுள் சிலர் ஓசை நயங்கருதி இருமொழிச் சொற்களையும் சொற்றொடர்களையும் கலந்து செய்யுள் இயற்றும் முறைக்கு வழிகாட்டியவர் வில்லிபுத்தூராழ்வார். பலவகைச் சந்தங்களோடு சொல்லணி, பொருளணி நிறைந்த காப்பியம் இது.

## 7. அரிச்சந்திர புராணம்

இதனை இயற்றியவர் நல்லூர் வீரகவிராயர். இது அரிச்சந்திர சரிதம் என்றும் வழங்கப்பட்டது. இந்நூலின் காலம் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

வாய்மையைக் காப்பாற்றுவதற்காகப் பதி இழந்து பாலனை இழந்து, படைத்த நிதியையும் இழந்து இறுதியில் இவ்வுலக வாழ்வையும் இழந்து நிற்கும் அரிச்சந்திரனைப் பற்றி 1225 பாக்களில் அமைந்த நூல் இது. பாயிரம் நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு ஆகிய பகுதிகள் நீங்க, இதில் பத்துப் படலங்கள் உள்ளன. நாட்டு நகரப் படலங்களை இவர் பாடியுள்ள முறை பெருங்காப்பியங்களுக்கு நிகராக உள்ளது. ஆசிரி-

Scanned by CamScanner

யரின் இயல்புகளில் ஒன்று, மூன்று மூன்றாக அடுக்கிச் சொல்வது. இதை இந்நூல் முழுவதிலும் காணலாம்.

## 8. நைடதம்

வடமொழியில் ஹர்ஷ சக்ரவர்த்தி செய்த நூல் நைஷதம். இது நளன் கதையைக் கூறுவது. இதனை நைடதம் என்ற பெயரில் அதிவீரராம பாண்டியர் தமிழில் ஆக்கியுள்ளார். பதினாறாம் நூற்றாண்டில் தென்காசி யைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த பிற்காலப் பாண்டிய மன்னர் இவர்.

வருணனையில் நைடதத்திற்கு இணையான வேறொரு நூல் இல்லை எனப் புகழ்வர். நைடதம் பாயிரப் பகுதியும் 28 படலங்களும் 1173 பாடல்களும் உடையது. அன்னத்தைத் தூது விட்ட பகுதி தமிழில் மிகவும் சிறப்பான பகுதி என்பர். சூதின் கேட்டினை வற்புறுத்த எழுந்தது இந்நூல். இவரே வெற்றிவேற்கை என்னும் நூலை இயற்றியவர். எளிய இனிய நடையில் அமைந்த நீதி நூல் இது. காசிக் காண்டம் என்னும் 2525 பாடல்கள் கொண்ட காப்பியத்தையும் இயற்றியுள்ளார்.

## 9. திருவிளையாடற்புராணம்

சோழப் பேரரசின் இறுதிக் காலத்தில் பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவர் 'திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்' என்ற நூலை இயற்றினார். சிறந்த செந்தமிழ் நடையில் இந்நூல் அமைய வில்லை. பரஞ்சோதியின் திருவிளையாடற்புராணம் இந்நூலினும் மேம்பட்டு விளங்குவதால் இந்நூல் தேடுவாரற்றுக் கிடக்கின்றது. பரஞ்சோதியாரின் நூல் சொல்நயமும், பொருள் நயமும் வாய்ந்து இலக்கியத் தகுதியைப் பெற்றுள்ளது. வடமொழியிலுள்ள ஹாலாஸ்ய மகாத்மியத்தைத் தழுவி இந்நூல் செய்யப் பெற்றது என்பர். மதுரையில் சிவபெருமான் செய்த 64 திருவிளையாடல்களைக் கூறுவது திருவிளை யாடற் புராணமாகும்.

## 10. தேம்பாவணி

இத்தாலிய நாட்டு கத்தோலிக்க மதகுரு கான்ஸ்டான்டியஸ் ஜோசப் பெஸ்கி என்ற வீரமாமுனிவர் தேம்பாவணி என்ற காப்பியம் படைத்தார். 3 காண்டங்களையும் 36 பாடல்களையும் 3615 விருத்தப்பாக்களையும் கொண்ட பெருங்காப்பியம். தமிழிலக்கியச் சிறப்பும் பொருள் வளமும் கொண்டது.

Scanned by CamScanner

தூய சூசையப்பரின் வாழ்க்கை வரலாற்றை இயற்கை வருணனை யோடும், சிறந்த உவமை திறத்தோடும், கற்பனை அழகோடும் இக்காப்பியம் எடுத்துக் காட்டுகிறது. தலைசிறந்த தமிழ் இலக்கியங் களின் தாக்கத்தினைக் காப்பியத்தில் மிகுதியாகக் காணலாம். சிறப்பாக திருவள்ளுவர், திருத்தக்கத்தேவர், கம்பர் ஆகியோரின் பாதிப்பு இக் காப்பியத்தில் மிகுதி எனலாம். சான்றாக யூதேயா நாட்டின் தலைநகரமாகிய செருசலேம் நகரை வருணிக்கும்.

"பயனினால் மறைநூல் ஒக்கும் பகலினை மணியால் ஒக்கும்
வியனினால் உலகம் ஒக்கும் வேலியால் கன்னி ஒக்கும்
முயலினால் அலையை ஒக்கும் முனிமுனி ஒன்னார்க் கொக்கும்
நயனினால் உயர் வீடொக்கும் நகரினை ஒக்கும் வீடே"

என்ற படலோடு,

"மேவ அரும் உணர்வு முடிவு இலாமையினால்
வேதமும் ஒக்கும்; விண்புகலால்
தேவரும் ஒக்கும்; முனிவரும் ஒக்கும்
திண்பொறி அடங்கிய செயலால்;
காவலின், கலை ஊர் கன்னியை ஒக்கும்;
... ... ..."

எனக் கம்பன் அயோத்தி நகரை வருணிக்கும் திறத்தையும் ஒப்பிட்டு மகிழலாம்.

### 11. இரட்சண்ய யாத்ரிகம்

ஆங்கிலத்தில் ஜான் பனியன் எழுதிய Pilgrims Progress என்ற நூலைத் தமிழில் மொழி பெயர்த்துக் காப்பியம் ஆக்கியவர் கிறித்துவக் கம்பன் என்று பாராட்டப்பட்ட H.A. கிருஷ்ணப்பிள்ளை (1827-1900) ஆவார். இரட்சண்ய யாத்ரிகம் என்ற பெயர்கொண்ட இக்காப்பியம் 4000 விருத்தங்களைக் கொண்டது.

இயேசு கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியை விளக்கும் இக்காப்பியத்தில் இயேசு தம் சீடர்களுக்குத் திருவிருந்து அளித்தது முதல் அவர் மரித்த மூன்றாம் நாள் உயிர்த்து, இவ்வுலகில் நாற்பது நாட்கள் இருந்து உயிர்தாங்கிய உடலோடு விண்ணகம் சென்றது வரையிலான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

### 12. சீறாப்புராணம்

இசுலாமிய தமிழ் இலக்கியங்களில் முதன்மையானது என்று சீறாப்புராணத்தைக் கூறுதல் வேண்டும். இக்காப்பியம் முகமது நபியின்

Scanned by CamScanner

வாழ்க்கை வரலாற்றை விளக்குவதாகும். 3 காண்டங்களையும் 92 படலங்களையும் 5027 பாடல்களையும் கொண்ட இந்நூல் வருணனை வனப்பும் சொற்செறிவும் கொண்டது. இதனை இயற்றிய உமறுப்புலவர் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

## 13. வேறு புராணங்கள்

வடமொழியில் பழங்காலத்திலிருந்தே பதினெண் புராணங்கள் உள்ளன என்று கூறுவது மரபு. இவற்றில் பல திருமாலின் அவதாரங்களை மையமாகக் கொண்டு எழுந்தவை. நாரத புராணம், விசுவாமித்திர புராணம் என்பன போன்று ரிஷிகளைத் தலைவர்களாகக் கொண்ட புராணங்களும் வடமொழியில் உள்ளன. இவற்றைத் தமிழில் எழுத தலைப்பட்டனர். அதனால் பல புராணங்கள் தோன்றின.

காளிதாசனின் இரகுவம்சத்தை அரிகேசரி என்பவர் மொழி பெயர்த்து 2480 செய்யுட்களில் பாடியுள்ளார். அதிவீரராமபாண்டியர் கூர்ம புராணத்தையும் லிங்க புராணத்தையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். மண்டலபுருடர் என்னும் சமணர் வடமொழியில் உள்ள சைன புராணமாகிய ஆதிபுராணத்தை, ஸ்ரீபுராணம் என்னும் பெயரில் தமிழில் பாடியுள்ளார். வாமன முனிவர் என்னும் சமணர் மேருமந்தர புராணம் என்னும் நூலைத் தமிழில் ஆக்கியுள்ளார்.

மேற்கூறிய புராணங்களேயன்றி வடமொழியில் அமைந்த பலவற்றை மொழிபெயர்த்தும் சுருக்கியும் எழுதியுள்ளனர். ஒவ்வோர் ஊரிலுள்ள கோயில்களைச் சிறப்பித்துப் பாடும் தலபுராணங்கள் பல எழுந்துள்ளன. தலம், தீர்த்தம், மூர்த்தி என்ற மூன்றைச் சிறப்பிப்பதாக அவை அமைகின்றன. நிரம்ப அழகிய தேசிகர் என்பார் சேதுபுராணம், திருப்பரங்கிரிப் புராணம் போன்றவற்றையும் இயற்றினார். இந்நூல்கள் பொதுவாகப் பழைய கற்பனையையும், பழைய உவமைகளையுமே கொண்டு விளங்கின. இவற்றில் புதிய கருத்தும் இல்லை. கற்பனை வளமும் இல்லை. தல புராணங்கள் அந்தந்த ஊரினையும் அங்குக் கோயில் கொண்டருளிய தெய்வத்தையும் மட்டுமே முதன்மைச் சிறப்புடையன என்று போற்றுபவையாக உள்ளன. குறிப்பிட்ட ஊரின் பெருமை அதில் உறையும் இறைவன் சிறப்பு, அங்கு வந்து வழிபட்டு மேன்மையடைந்தோர் பற்றிய கதைகளின் தொகுப்பாக அமையும். இக்கதைகளைச் சூத முனிவர் பிற முனிவர்களுக்கு எடுத்துரைப்பதாக அமைவது பொதுப்பண்பாகும்.

Scanned by CamScanner

கோயில் புராணம் என்னும் தலபுராணம் உமாபதி சிவத்தினால் இயற்றப்பட்டதாகும். தல புராணங்களுள் இலக்கியத் தகுதியுடன் அழியாமல் வாழும் பெருமை பெற்றது கச்சியப்ப முனிவர் இயற்றிய தணிகைபுராணம். சிவப்பிரகாசர் திருக்கூவப் புராணம் பாடியுள்ளார். அந்தகக்கவி வீரராகவ முதலியார் திருக்கழுக்குன்ற புராணம் பாடினர். சைவ எல்லப்பநாவலர் திருவண்ணாமலை, திருவெண்காடு, திரு விரிஞ்சை முதலான தலங்களுக்குப் புராணங்கள் இயற்றினார். மிக அதிகமாகத் தலபுராணங்கள் பாடிய பெருமையுடையவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. தல புராணங்கள் மிகச் சிலவே வழக்கில் உள்ளன. அவற்றுக்கு இலக்கியத் தகுதி இருப்பதால் வாழ்கின்றன.

Scanned by CamScanner

11

# இரட்டை காப்பியங்கள் பெயர்ப் பொருத்தம்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தையும் பௌத்த சமயக் கொள்கையை விளக்கும் நூலான மணிமேகலையையும் இரட்டைக் காப்பியங்கள் என்று வழங்குவது மரபு. இருநூல்களும் ஐம்பெருங் காப்பியங்களில் அடங்கியிருக்கின்றன. அவை ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றியவை. கதை அமைப்பும் நூல் அமைப்பும் ஒரு தன்மை உடையனவாய் விளங்குகின்றன. இக்காரணங்களோடு நூலாசிரியர் களிடையே விளங்கிய நெருங்கிய நட்பாலும் இவ்விரு காப்பியங்களை இணைத்து வழங்கும் மரபு தோன்றியிருக்கலாம்.

## இளங்கோவும் சாத்தனாரும்

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளும் மணிமேகலை ஆசிரியர் சாத்தனாரும் ஒரு காலத்தவர். இருவரும் நண்பர்கள். சாத்தனார் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர். இளங்கோவடிகள் சமண சமயப்பற்றுடையவர். இருவரும் சமயத்தால் வேறுபட்டிருந்தாலும் தமிழால் ஒன்றுபட்டிருந்தனர்.

> தமிழில் காப்பியங்களும் புராணங்களும் என்ற தலைப்பின்கீழ் வரும் சிலம்பு, மேகலை பற்றிய செய்திகளையும் இக்கட்டுரையுடன் சேர்த்துக் கொள்க.

## தோற்றமும் அமைப்பும்

சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சியைச் சாத்தனார் ஓரளவு நேரில் கண்டவர். கண்ணகிக்கும் கோவலனுக்கும் மதுரையில் நேர்ந்தனவற்றை அவர் நேரில் கண்டிருக்கலாம். அவ்விருவரின் புகார் நகர வாழ்வைப் பற்றியும், புகார் நகரில் அவர்களோடு தொடர்புடையார் வாழ்வைப் பற்றியும் யாரேனும் சொல்லக் கேட்டிருப்பார். சாத்தனார், கண்ணகி சேரநாடு அடைந்து விண்ணுலகம் எய்தியதைச் செங்குட்டுவனுக்கு

Scanned by CamScanner

அந்நிகழ்ச்சியைப் பார்த்த குன்றக்குறவர்கள் வந்து கூறினர். அச்சமயம் சேர அரசன் அருகிருந்த சாத்தனார் கண்ணகியின் வரலாறு முழுவதையும் அரசனுக்குக் கூறினார். இதனைச் சேரஇளவல் இளங்கோவடிகளும் கேட்டார். முடிவில் சாத்தனார் இளங்கோவடிகளிடம் 'முடிகெழுவேந்தர் மூவர்க்கும் உரியதாதலால் அடிகள் நீங்களே இக்கதையினை எழுதி அருளுக' என்று வேண்டிக்கொண்டார். அடிகளும் சிலப்பதிகாரம் பாடி அருளினார். அடிகள் பாடிய காப்பியத்தைச் சாத்தனார் கேட்டார்.

சிலப்பதிகாரக் கதையினைக் கேட்ட சாத்தனார் மணிமேகலைக் காப்பியம் இயற்றினார். சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சிக்குப்பின் நிகழ்ந்த கதையினைத் தொடர்ந்து கூறுகிறது மணிமேகலைக் காப்பியம். சிலப்பதிகாரக் காப்பியத்தின் கதை மாந்தர்களும் மணிமேகலைக் காவியக்கதை மாந்தர்களும் தொடர்புடையோர்களாக இருப்பதால், ஒன்றன்பின் ஒன்றாகக் கதையினை நடத்திச் செல்ல முடிகிறது. இரட்டைக் காப்பியம் என்று கூறும் வழக்கம் இங்குப் பொருத்தமாகிறது.

சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சியின் முடிவும் மணிமேகலைக் கதையின் துவக்கமும் சற்றேறக்குறைய ஒன்றாகின்றன. சிலப்பதி காரத்தின் கதைத் தலைவன் கோவலன் கொலையுண்ட பிறகு அவன் காதலி மாதவி துறவறம் மேற்கொள்கிறாள். மணிமேகலைக் காப்பியத் தின் துவக்கம் மாதவியின் மகள் மணிமேகலை துறவு பூண்ட செய்தி யையே கொண்டு விளங்குகின்றது. மணிமேகலைக் காப்பியத்திற்கு ஆசிரியர் இட்டபெயர் 'மணிமேகலை துறவு' என்பதேயாம். இக் குறிப்பைச் சிலப்பதிகாரத்தின் இறுதிப் பகுதியினின்றும் அறிகிறோம்.

## நிகழ்விடம்

சிலப்பதிகார ஆசிரியர் காலத்தில் புகார் நகர் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிற்று. ஆனால் மணிமேகலை ஆசிரியர் காலத்தில் அந்நகர் அழிவுற்ற நிலையிலிருந்தது. கதை நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடம் புகார் நகர். கண்ணகியின் வரலாற்று நிகழ்ச்சிக்குப்பின் நிலவிய கால இடைவெளியில் அந்நகரின் பல பகுதிகள் அழிந்தன.

## ஒற்றுமைப் பண்புகள்

தமிழ்நூல்கள் அறம்,பொருள், இன்பம்,வீடு ஆகிய இந்நான்கு உறுதிப் பொருள்களையும் கூறுவதை நோக்கமாகக் கொண்டிருக்கும். சிலப்பதிகாரத்தில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் கூறப்பட்டு இருப்பதாகவும், நான்காவதாகிய வீடு மணிமேகலையில் கூறப்பட்டு

Scanned by CamScanner

இருப்பதாகவும் கூறுவர். இரட்டைக் காப்பியம் என்று இவ்விரு நூல் களையும் வழங்கும் வழக்கம் இதனால் உறுதிப்படுகிறது. இக்கருத்துக்குச் சார்பாக மேலும் சில காரணங்களையும் கூறலாம். பிற்காலத் தமிழ் நூல்கள் அனைத்திலும் கடவுள் வாழ்த்துப்பகுதியே முதலில் அமைகிறது. ஆனால் இவ்விரு காப்பியங்களிலும் கடவுள் வாழ்த்து முதலாவதாக அமையவில்லை. இரு ஆசிரியர்களும் திங்கள், ஞாயிறு, மழை ஆகிய வற்றைப் போற்றி நூலைத் தொடங்குகின்றனர். இவ்விரு காப்பியங் களும் ஆசிரியப்பாவால் அமைந்துள்ளன. இரண்டு நூல்களும் முன்னோர் மொழிந்த பொருள்களைப் பொன்னே போல் போற்று கின்றன. சிலப்பதிகாரம் பல காதைகளாகப் பாகுப்பட்டுள்ளது. காதை என்பது கதை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. மணிமேகலை யும் இதே போல் பல காதைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதுகாறும் கூறிய காரணங்களால் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று தெளியலாம்.

இரட்டைக் காப்பியங்கள் என்பதற்குரிய காரணங்களாக் பின்வரும் கருத்துக்களைக் தொகுத்துக் கூறலாம்.

1. இவை இரண்டும் ஒரே காலத்தில் தோன்றியவை.
2. இரண்டுமே பெண்களைத் தலைவியாகக் கொண்டவை.
3. இரண்டுமே குடிமக்கள் காப்பியங்களாகத் திகழ்கின்றன.
4. ஒரே கதையின் முற்பகுதியைச் சிலப்பதிகாரமும், பிற்பகுதியை மணிமேகலையும் கூறுகின்றன.
5. கண்ணகி வரலாற்றை இளங்கோவடிகளுக்கு எடுத்துச் சொல்லி, அதை முடியுடை மன்னர் மூவர்க்கும் பொதுவான ஒரு காப்பியமாக அவரை எழுதச் சொன்னவரே சாத்தனார் தான் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது.
6. சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் சொல்லச் சாத்தனார் அதை கேட்டார் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது.
7. அதே போல மணிமேகலையைச் சாத்தனார் பாட, இளங் கோவடிகள் கேட்டார் என்று மணிமேகலைப் பதிகம் கூறுகிறது.
8. இரண்டு காப்பியங்களிலும் முப்பது காதைகள் உள்ளன.
9. சிலப்பதிகாரம் பெரும்பாலும் ஆசிரியப்பாவில் அமைந்தது மணிமேகலை முற்றும் ஆசிரியப்பாவால் அமைந்தது.

Scanned by CamScanner

10. மேலும் இவ்விரு காப்பியங்களும் சொல், தொடர், அடி, கருத்து, திருக்குறள் 'மேற்கோள் காட்டுதல், உவமை நலங்கள் ஆகியவற்றில் நெருக்கமான ஒப்புமை உடையனவாய் விளங்குகின்றன.

- நூலில் வரும் கதைப் பாத்திரங்களின் பெயர்களைப் பொறுத்த வரை தான் ஒற்றுமை இருப்பதாகவும், கதை நிகழ்ச்சிகள் ஒன்றுக்குப்பின் ஒன்று முரானக உள்ளன என்றும், இரண்டு நூல்களின் தோற்றத்திற்கிடையே கால இடைவெளி மிகுதியாக உள்ளது என்றும், சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளும் மணிமேகலை ஆசிரியர் சாத்தனாரும் ஒரே காலத்தவர் அல்லர், என்றும் மற்றும் பல காரணங்களைக் காட்டி இவற்றை இரட்டைக் காப்பியங்கள் என்று கூறும் வழக்குத் தவறு என்று கருதுவோரும் உளர். நாவலர் சோமசுந்தர பாரதியார் இக்கருத்துடையவர் என்பது சுட்டத்தக்கது.

12

# தமிழில் இலக்கண நூல்களின் எழுச்சி

கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையுள்ள காலக் கட்டம் தமிழக அரசியல் வரலாற்று நோக்கில் கூறுவதென்றால் பல்லவ பாண்டியர் காலம் எனலாம். இலக்கிய வரலாற்று நோக்கில் கூறுவதென்றால் பக்தி இலக்கிய காலம் எனலாம். அதே காலக்கட்டத்தில் இலக்கண நூல்கள் தோன்றியமையால் இலக்கண எழுச்சிக்காலம் என்றும் கூறலாம் என்பர் மு. அருணாச்சலம். பல்லவர் பிறமொழிப் பகுதியிலிருந்து தமிழகத்துக்கு வந்தவர்கள். பாண்டியர் தமிழகத்தின் பழைய அரசகுடியைச் சேர்ந்தவர். ஆனால் தமிழகம் ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் (களப்பிரர்) பிறமொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் தாக்குதலுக்கு உள்ளானது. களப்பிரர்கள், சமண, புத்த, சமயமான வடநாட்டுச் சமய நெறியைப் பின்பற்றியவர்கள். அவர்கள் தமிழ்ப் பண்பாட்டுச் சீர்குலைவை ஏற்படுத்தியிருக்கலாம் என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். பல்லவர் தெலுங்கு மொழியைப் பேசும் ஆந்திரப் பகுதியிலிருந்து தமிழகத்தின் வடபகுதியையும் பாண்டியர் தென்பகுதியையும் இக்காலக்கட்டத்தில் ஆண்டனர்.

மு. அருணாச்சலம் அவர்கள் இக்காலக்கட்டத்தை இலக்கண எழுச்சிக் காலம் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். தம் தமிழ் இலக்கிய வரலாற்று நூலில்"ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தராலும் பிறராலும் இயல் தமிழுக்கும் இசைத் தமிழுக்கும் விளைந்த ஒப்பற்ற ஆக்கம் காரணமாக அடுத்த காலமாகிய எட்டாம் நூற்றாண்டில் இலக்கணத் துறையில் ஒரு பெருங்கிளர்ச்சியும் எழுச்சியும் ஏற்பட்டன. பலதுறை அறிஞர்களான இலக்கணப் புலவர்களைத் தம் மாணாக்கராய்க் கொண்ட ஒரு பேராசிரியர் அகத்தியர் என்ற பெயர் படைத்தவராய் வாழ்ந்தார். இவர் பாட்டியல் முதலான பலதுறைப் புது இலக்கண நூல்கள் செய்தார். இவருடைய மாணாக்கர் பலர். தொல்காப்பியர் முதலான பண்டைப் பெயர்களையே இவர்கள் தரித்திருந்தனர். இத்தொல்காப்பியரே

Scanned by CamScanner

ஒரு பாட்டியல் செய்தார். இத்தொல்காப்பியரும் பிற பதினொரு புலவரும் பன்னிரு படலம் என்ற புறப்பொருள் இலக்கண நூலைப் பாடினர். புதுப்பாட்டியல் நூல்கள் தோன்றின. ஓர் அணியிலக்கண நூலும் தோன்றிற்று. நிகண்டு நூல் ஒன்றும் தோன்றிற்று. பரதசேனா பதீயம் என்ற இசைநூலும் தோன்றி அடுத்த நூற்றாண்டில் பஞ்ச மரபு தோன்றுவதற்கு வழி காட்டிற்று. மதிவாணனார் நாடகத் தமிழ் நூல் என்ற நாடகத்தமிழ் நூலும் இக்காலம் தோன்றிற்று. இறையனார் களவியல் என்ற அகப்பொருள் இலக்கண நூலும் அதன் உரையும் இக்காலம் தோன்றின. இந்திரகாளியம் சிறப்பான இசைத்தமிழ் இலக்கணநூல். புதுநெறியை வகுத்துத் தந்திருக்கிறது. அன்றி அபிநயம் என்ற மற்றொரு பேரிலக்கண நூலை அபிநயனார் செய்திருக்கிறார். இது எழுத்து, சொல், பொருள், யாப்பு, பாட்டியல் ஆகிய பொருள்களைச் சொல்வது. வரலாற்றில் காணும்போது அகத்தியனார், அபிநயனார், இந்திரகாளியம் செய்த யாமனேந்திரர் ஆகிய மூவரும் வேறான மூன்று இலக்கண நெறி களை வகுத்துக் காட்டினர் என்று திட்பமாய்த் தெரிகிறது. மேற்குறித்தபடி இவ்வெட்டாம் நூற்றாண்டில் இசைத் தமிழில் எல்லாப் பிரிவுகள் யற்றியும் நாடகத் தமிழ் பற்றியும் புதுநூல்கள் எழுந்திருந்தன என்பதைத் தெளிவாய்க் காண்கிறோம் என்று தெளிவாகவும் விளக்காமாகவும் குறிப்பிட்டுள்ளார். இலக்கணம் பல்லவர்- பாண்டியர் காலத்தில் எழுதப் பெற்றதற்கு மேலும் ஒரு சான்று உள்ளது. இக்காலத்தில் எழுதப்பட்ட களவியல் உரையாசிரியர் தன்னுடைய உரையில் பாயிரத்தின் சிறப்பு, பண்வகை, பாயிரப் பொருட்கள் பற்றிய நூற்பாக்களை மேற்கோள் காட்டியுள்ளார். அவை பின்னர் நன்னூலின் பாயிரப் பகுதிகளாகச் சேர்க்கப்பட்டுவிட்டன. களவியல் உரையாசிரியர் இந்த மேற்கோள் களைக் காட்டுவதால் அவர் காலத்து இலக்கண அறிஞர் ஒருவரால் இயற்றப்பட்டு வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

### 1. இறையனார் அகப்பொருள்

இந்நூலில் களவு ஒழுக்கம் பற்றிய செய்திகளே விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. இதன்கண் அமைந்திருக்கும் அறுபது நூற்பாக் களுக்கும் சிறந்த உரை உள்ளது. ஒவ்வொரு துறைக்கும் திருக்கோவை யார்ப் பாடல்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இந்நூலின் உரையாசிரியர் நக்கீரர். இந்நூலின் ஆற்றல் மிக்க உரைநடை படிப் போர்க்குப் பேரின்பம் பயப்பதாகும்.

Scanned by CamScanner

இது இறையனார் என்னும் புலவரால் இயற்றப் பெற்ற அகப் பொருள் இலக்கணமாகும். பொருள் இலக்கணத்தில் இந்நூல் அகப் பொருள் பற்றியதாயினும் அதிலும் குறிப்பாகக் களவியல் பற்றிக் கூறுவதால் இதனை இறையனார் களவியல் என்றும் குறிப்பிடுவர். இவ்வாசிரியர் கி.பி.முதல் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்பர். இந்நூல் சூத்திர நடையில் எழுதப்பட்டது. அறுபது (சூத்திரங்களை) நூற்பாக் களில் பண்டைத் தமிழரின் அகவாழ்வைக் கூறுவது.

இந்நூலுக்கு உள்ள உரையைப் பற்றிப் பல கதைகளும் கதைத் துணுக்குகளும் உள்ளன. இவ்வுரையினால் பண்டைத் தமிழ்ச் சங்கங்கள் பற்றியும் அவை வாழ்ந்த காலம், இருந்த இடம், ஆதரித்து வந்துள்ள அரசர்கள், அங்கம் வகித்த புலவர்கள், வந்து பாடிச்சென்ற புலவர்கள், பாடப்பெற்ற அரசன், பாடிய பாடல்கள், எழுதப்பட்ட இலக்கண இலக்கிய நூல்கள் என்று செய்திகளை அறிய முடிகிறது. இவையெல்லாம் கற்பனைகள் என்றும் கதைகள் என்றும் உண்மைக்கு ஒவ்வாத செய்திகள் என்றும் சிலர் கூறினும் பண்டைய தமிழகத்தின் இலக்கிய இலக்கண பாரம்பரியத்தை அறிந்து கொள்வதற்கு உதவுகின்ற சிறந்த உரையாகத் திகழ்கின்றது.

## 2. புறப்பொருள் வெண்பாமாலை

ஐயனாரிதர் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கணம் பன்னிருபடலம் என்ற நூலைத் தழுவிப் புறப்பொருள் வெட்சி முதலாக பெருந்திணை ஈறாகப் பன்னிரு பகுதிகளாகப் பிரித்துப் பழந்தமிழர் வாழ்வை எடுத்துரைக்கிறது. இந்நூலின் கண் நூற்பாக்களுக் குச் சான்றாக அமைந்துள்ள வெண்பாக்கள் ஒட்டமும் நயமும், பொருள் வளமும் கொண்ட தொல்காப்பியப் புறத்திணையியலில் கூறப்பட்டி ருக்கும் செய்திகளோடு சிற்சில இடங்களில் மாறுபடுகிறது. நூலாசிரியர் காலம் ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டு என்பர். ஐயனாரிதனார் சேர அரசர்.

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்னும் பன்னிரண்டு படலங்களைக் கொண்டது. இந்நூலின்கண் 19 நூற் பாக்களையும் 361 வெண்பாக்களையும் 341 கொளுச் செய்யுட்களையும் காணலாம்.

பண்டைக்காலத்திய புறவாழ்க்கையைப் பற்றித் தெரிந்துகொள்ள இந்நூல் மிகவும் பயன்படுவதாகும். வரன்முறையாகப் போர்நிலை,

Scanned by CamScanner

போர் தொடங்குவதற்குரிய சூழ்நிலை, அதை நடத்திச் செல்லும் நிலை, பகை அரசோடு எதிர்த்து நிற்கும் நிலை, பகை அரசன் தன்னையும் தன் மதிலையும் காத்துக் கொள்ளும் நிலை, அதனை வளைத்து நிற்கும் நிலை முதலிய பல செய்திகளைக் கூறும் இந்நூல். மேலும் கைக்கிளை, பெருந்திணை ஆகிய திணைகளைப் பற்றிய விளக்கங்களையும் இந் நூலில் காணலாம்.

### 3. யாப்பருங்கலம்

பிற திராவிட மொழிகளில் யாப்பு அமைதி பற்றிக் கூறும் நூல்கள் மிக இருக்கின்றன. தமிழில் அவ்வளவு இல்லையென்றாலும் யாப்பிலக்கணங்களுக்குக் குறைவில்லை. தமிழ் யாப்பு அமைதி பற்றிப் பேசும் யாப்பிலக்கணங்களில் தலையாய நூலாக விளங்குவது யாப்பருங்கலமாகும். கடல்போல் பரந்து கிடக்கும் யாப்பு அமைதியை நன்கு அறிய வேண்டுமானால் கலம் அல்லது கப்பல் போன்ற இந்நூலைப் பயன்படுத்த வேண்டும் என்னும் பொருளில் இந்நூல் யாப்பருங்கலம் எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும்.

யாப்பருங்கலத்தை இயற்றியவர் அமிர்தசாகரனார். இவர் காலம் கி.பி.10ஆம் நூற்றாண்டு என்பர். இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் ஆகிய மூன்று இயல்களைக் கொண்டது. 96 நூற்பாக்களை உடையது. செய்யுளின் உறுப்புகள், பாவினங்களின் வகைகள், அவற்றின் இலக்கணங்கள் முதலியவற்றைக் கூறுவது இந்நூல்.

### 4. யாப்பருங்கலக் காரிகை

இந்த நூலும் யாப்பிலக்கன அமைதியைக் கூறுவதே. இதனை எழுதியவரும் யாப்பருங்கல ஆசிரியராகிய அமிர்தசாகரரே. இந்த நூலின் பெயரும் யாப்பருங்கலத்திலிருந்து பிறந்ததே. எனவே, யாப்பருங்கலத்தில் கூறப்படும் செய்திகளையே இந்நூலில் காணலாம். தீபங்குடியில் வாழ்ந்த சமணப் பெரியார் அமிர்தசாகரர் ஆவார்.

யாப்பருங்கலத்தைப் போன்றே உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என வகுக்கப்பட்டு 60 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. செய்யுளின் உறுப்பாகிய எழுத்து, அசை,சீர்,தளை,அடி,தொடை ஆகிய வற்றை உறுப்பியலிலும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா ஆகிய வகைகளைச் செய்யுளியலிலும் பிற செய்திகளை ஒழி-பியலிலும் காணலாம். இந்நூலுக்குக் குணசாகரர் உரைகண்டுள்ளார்.

### 5. யாப்பருங்கல விருத்தி

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் செய்யுளியல், பாக்களைப் பற்றியும் பாக்களின் அமைப்புப் பற்றியும் விரிவாகக் கூறினாலும், பிற்காலத்தில் தோன்றிய சில புதிய பாவினங்கள், காலத்தால் வழக்கொழிந்து போனவை காரணமாகப் புதியதோர் இலக்கணம் எழ வேண்டிய தேவை நேரிட்டது. அத்தேவையை நிறைவு செய்யத் தோன்றிய யாப்பருங்கலமும் யாப்பருங்கலக் காரிகையும் பிற்காலத்தில் யாப்பு இலக்கணப் பயிற்சிக்காகப் பயிலப்பட்டன. யாப்பருங்கலத்திற்குச் சிறந்த உரை உண்டு. பல யாப்பு நூல்கள் தமிழில் இருந்தமையை இந்நூலின் உரைகாட்டும். உரையாசிரியர் பரந்த அறிவும் சிறந்த நுட்பமும் கொண்டவர். இவர் காட்டும் எடுத்துக்காட்டுகளில் இருந்து தமிழ் மொழியின் சொல் வளமும் அவற்றின் திட்பமும் நன்கு விளங்கும். தன் உரைச் சிறப்பால் யாப்பருங்கல விருத்தி எனப் பெறுவதே இதன் பேருரை மாண்பை வெளிப்படுத்துவதாம். யாப்பு இலக்கணத்திற்கு என அமைந்த ஒரு கலைக்களஞ்சியம் என யாப்பருங்கல விருத்தி போற்றப்படுகிறது.

### 6. வீரசோழியம்

பௌத்த சமயச் சார்பினரான புத்தமித்திரர் இந்நூலின் ஆசிரியர். புத்தபிரானிடம் பக்தி கொண்ட இவர் பொன்பற்றி என்னும் ஊரினர் என்பதை நூற்பாயிரத்தால் அறிகிறோம். தம்மை ஆதரித்த வீரசோழ மன்னன் வீரராசேந்திர சோழன் பெயரே நூலுக்குப் பெயரிட்டுள்ளது. இந்நூலாசிரியருடைய நன்றியுணர்ச்சியைப் புலப்படுத்துகின்றது. இந்நூலுக்குப் பெருந்தேவனார் உரையெழுதியுள்ளார். இந்நூல் கி.பி.பதினோராம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

இலக்கணத்தை ஐந்து பிரிவாக முதலில் அமைத்துக் கொண்டது வீரசோழியம். இந்நூலில் புத்தமித்திரர் நிகண்டு ஆய்வை மொழி அமைப்பின் உட்கூறாகக் கொள்ளவில்லை. அதனால் பிறகு வந்த எல்லா இலக்கண நூல்களும் நிகண்டு ஆய்வைத் தொடராமல் விட்டன. ஐந்திலக்கணத்தை முறையே எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அலங்காரம் என்னும் ஐந்து அதிகாரங்களில் கூறினார்.

183 நூற்பாக்களைக் கொண்ட இந்நூல் கட்டளைக் கலித்துறை யாப்பால் ஆனது. எழுத்ததிகாரம் தொல்காப்பியம் அல்லது நன்னூலில் காணப்படுவது போன்று விரிவாக இல்லை. எழுத்ததிகாரத்தில் புணர்ச்சி இலக்கணம் மிகுதியாகச் சொல்லப்பட்டுள்ளது.

Scanned by CamScanner

சொல்லதிகாரம் மிக விரிவாக உள்ளது. ஏழு படலங்களைக் கொண்ட இவ்வதிகாரம் 57நூற்பாக்களைக் கொண்டுள்ளன. இவ்வதி காரத்தில் பிரிப்பு முறையும் வடமொழி இலக்கண நூல்களை யொட்டியுள்ளது. பொதுவாக இந்நூல் வடமொழி இலக்கணத்தை அடிப்படையாகக் வைத்து இவ்விலக்கணம் தமிழ்மொழிக்கு அமையுமா? என்று பார்ப்பதையே நோக்கமாகக் கொண்டு எழுந்துள்ளது எனலாம்.

"பொதுவாகத் தமிழ்மொழியின் சொல்லமைப்புக் காட்டுவதாகச் சொல்லதிகாரம் அமையவில்லை, என்று கூறிவிடலாம். ஏனெனில் தமிழ்ச் சொற்களின் பாகுபாடு பற்றியும் குறிப்பிடாமல் சில இலக்கணக் கூறுகளை மட்டுமே பேசுகிறது இந்நூல்" என்று டாக்டர் செ.வை. சண்முகம் குறிப்பிட்டுள்ளார்.

வீரசோழிய ஆசிரியர் மட்டுமின்றி உரையாசிரியராகிய பெருந் தேவனாரும் வடமொழி இலக்கணக் கொள்கையில் நம்பிக்கை யுடையவர் என்பதும் தமிழ்மொழி வடமொழியிலிருந்து வந்தது என்ற எண்ணத்தைக் கொண்டவர் என்பதும் அவருடைய உரைகாட்டும் உண்மைகளாம். இதனால்தான் தமிழ்ச்சொல்லுக்கு எல்லாம் வடநூலே தாய் என்று வீரசோழியம் (நூ.60) கூறியது. காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றத்தினால் இத்தகைய குறைபாடுகள் இவ்வாசிரியரிடம் இருந்தா லும் சில சிறந்த இலக்கண விளக்கங்களை இவரிடம் காணமுடியும். பேச்சு வழக்கில் காணப்படுகின்ற சில மாற்றங்களை இவர் ஆங்காங்கே காட்டிச் செல்வதையும் புதிய வினையெச்ச விகுதிகள் பற்றிக் கூறுவதை யும் எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். மொழியில் காணப்படும் புதிய மாற்றங்களையும் சாதாரண மக்களிடையே காணப்படும் பேச்சு வழக்கினையும் அறிகின்ற நுட்பமான அறிவுடைய இவ்வாசிரியர் தம் நோக்கத்தில் வெற்றி பெறவில்லை. நன்னூலைப் போல இந்நூல் தமிழ் மக்களைச் சேரவில்லை. முன்பே குறிப்பிட்டதுபோல், பிறமொழி இலக்கணத்தைத் தமிழ்மொழியில் காணவிரும்பியதும் வடமொழி இலக்கணக் குறியீடுகளை அதிகமாகப் பெய்து இலக்கணம் அமைத்ததும் உள்ளத்தை ஈர்க்கும் நூற்பாக்களை அமைக்காததும் இந்நூலின் வீழ்ச்சிக்குக் காரணங்களாக டாக்டர் அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

### 7. நேமிநாதம்

சமண சமயத்தினரான குணவீர பண்டிதர் இதன் ஆசிரியர். இவர் தொண்டை நாட்டிலே களத்தூரில் பிறந்தார். இந்நூல் எழுத்து,

Scanned by CamScanner

சொல் என்னும் இரண்டு இலக்கணங்களையும் தொண்ணூற்றாறு நூற்பாக்களில் சுருங்கக் கூறுகிறது. எனவே இந்நூலுக்குச் சின்னூல் என்னும் பெயரும் உண்டு. நேமிநாதர் என்னும் சமண தீர்த்தங்கரர் பெயரால் எழுந்த இந்நூலின் காலம் கி.பி.12-13 ஆம் நூற்றாண்டு என்பர்.

எழுத்ததிகாரம் இருபத்து நான்கு நூற்பாக்களைக் கொண்டது. இந்நூற்பாக்கள் எண், பெயர், முறை, மாத்திரை, பிறப்பு, வடிவம், புணர்ச்சி ஆகியவற்றைக் கூறும். மேலும் மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துக்கள் பற்றியும் வகை புணர்ச்சி பற்றியும் இவ்வதிகாரம் கூறும். பொதுவாக இந்நூல் தொல்காப்பியத்தைப் பின்பற்றினாலும் சிலஇடங்களில் வீரசோழியத்தையும் பின்பற்றி உள்ளது. புணர்ச்சி பற்றிய 15 நூற்பாக்களில் பத்து வீரசோழிய நூற்பாக்கள் போலவே உள்ளன.

சொல்லதிகாரம் மொழியாக்க மரபு, வேற்றுமை மரபு, உருபு மயங்கியல், விளி மரபு, பெயர் மரபு, வினைமரபு, இடைச்சொல் மரபு, உரிச்சொல் மரபு, எச்ச மரபு ஆகிய ஒன்பது இயல்களைக் கொண்டது. தொல்காப்பியத்தில் காணும் கிளவியாக்கம் முதல் எச்சவியல் ஈறாக உள்ள ஒன்பது இயல்களோடும் இவை ஒப்ப வைத்து எண்ணத்தக்கன. அமைப்பில் மட்டுமல்லாமல் கூறும் பொருளிலும் தொல்காப்பியத்துடன் ஒத்து விளங்குகின்றது. சொல்லின் ஆக்கங்களை, திணை, பால்,வழு, வேற்றுமை, தொகை, இடம், காலம், வழக்கு (உலக வழக்கு, செய்யுள் வழக்கு) என்ற எட்டுத் தலைப்புகளில் அடிப்படையில் ஆராய்ந்து கூறுவது நேமிநாதம்.

இதனை

> "ஏற்ற திணை இரண்டும் பால்ஐந்தும் ஏழ்வழுவும்
> வேற்றுமை எட்டும் தொகை ஆறும் - மாற்றரிய
> மூன்றிடமும் காலங்கள் மூன்றும் இரண்டிடத்தாற்
> தோன்ற உரைப்பதாம் சொல்." (சொல்-1)

என்னும் நூற்பாவினால் நன்கு அறியலாம்.

தொல்காப்பியத்தைப் பின்பற்றினாலும் திணை, இடைச்சொல், அன்மொழித் தொகை, பொருள்கோள் ஆகியவற்றின் சில தனித் தன்மைகளைக் கொண்டது நேமிநாதம்.

## 8. நம்பியகப்பொருள்

தொல்காப்பியர் கூறிய அகப்பொருள் இயலை எளிமையாக விரிவுபடுத்த எழுந்த தனி நூலாகும். இந்நூல் அகப்பொருளை

Scanned by CamScanner

அகத்திணை, புறத்திணை, களவு, வரைவு, ஒழிபு என்ற ஐந்து பிரிவுகளாக வகுத்துரைக்கிறது. நாற்கவிராச நம்பி என்பார் இந்நூலின் ஆசிரியரா வார். இவர் ஒரு சமணர். இந்நூலுக்கு இருவர் உரையெழுதி உள்ளனர். இதன் உரையில் பொய்யா மொழிப் புலவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவையில் அமைந்திருக்கும் நானூறு பாடல்களும் காட்டப்படு கின்றன. இதன் காலம் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதி என்பர்.

## 9. தண்டியலங்காரம்

இது வடமொழியாசிரியர் தண்டி என்பார் இயற்றிய காவியா தர்ஸம் என்னும் வடநூலினை அடியொற்றி எழுதப்பட்டதாகும். அலங் காரம் என வடநூலார் வழங்கும் அணிகளைப் பற்றி இந்நூல் கூறுகிறது. 125 நூற்பாக்களைக் கொண்ட இந்நூல் பொதுவணியியல், பொருளணி யியல், சொல்லணியியல் ஆகிய மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள் ளது. சொற்சிறப்பும், பொருட்சிறப்பும் பொருந்திய வெண்பாக்கள் பல எடுத்துக்காட்டுக்களாக இந்நூலில் பொதிந்துள்ளன.

தமிழில் வழங்கும் அணி இலக்கண நூல்களில் இந்நூல் சிறந்தது. தண்டி எழுதியதால் தண்டியலங்காரம் எனப் பெயர் பெற்றது. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது. தொல்காப்பியத்தில் காணப் படும் பல அணிக் கொள்கைகளை இந்நூல் கொண்டுள்ளது. காவியாதர் ஸத்தைப் பின்பற்றியிருந்தாலும் மொழிபெயர்ப்பு நூல் என்று கூற முடியாத அளவிற்குச் சிறந்து விளங்குகிறது. இந்நூலாசிரியர் உதாரணச் செய்யுள் பலவும் இயற்றியிருப்பதால் இலக்கியப் பயிற்சியும் நிரம்பி யவர் என்பது விளங்குகின்றது. இந்நூலில் காணும் உதாரணச் செய்யுள் பலவற்றை இளம்பூரணர் முதலிய உரையாசிரியர் எடுத்தாண்டுள்ளனர்.

தமிழ் அணி இலக்கணங்களில் இதுவே சிறந்தது. 35 அணிகளைப் பற்றி விரிவாகக் கூறும் இந்நூல், காப்பிய இலக்கணம் குறித்தும் விரிவாகவும் தெளிவாகவும் கூறியுள்ளதைக் குறிப்பிட்டாக வேண்டும். ஐந்திலக்கணம் கூறும் இலக்கண நூல்கள் அணிகளைப் பற்றிக் கூறினாலும் தண்டியலங்காரமே மிக விரிவாகக் தெளிவாகக் கூறியுள்ளது. இதுவே இதன் சிறப்பினைக் காட்டும்.

## 10. பன்னிருபாட்டியல்

இதன் காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு. ஒருவரால் இயற்றப்பட்டதென்றும், பன்னிரு புலவர்களால் பாடப்பட்டதென்றும் பதின்மூன்று புலவர்களால் பாடப்பட்டதென்றும் கூறுவர். இந்நூல் எழுத்தியல், சொல்லியல், இனவியல் என மூன்று இயல்களைக்

கொண்டது. 358 நூற்பாக்கள் இதன்கண் உள்ளன. எழுத்தியல், பிறப்பு, வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னல், புள், நாள் ஆகிய 9 வகைப் பொருத்தங்களையும் கூறும். இனவியல் , பிரபந்தங்களின் இலக்கணத் தினைக் கூறும் 66 வகையான சிற்றிலக்கியங்களின் இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. செய்யுள் வகைகள் பற்றிய கல்வி தனிநிலையில் பாட்டியல்களாகத் தோன்றியதை இது காட்டும். இந்நூலின் ஆசிரியர் பெயர்கள் சங்க கால ஆசிரியர்களின் பெயர்களைப் போலக் காணப் பட்டாலும், இவர்கள் அவர்களிலிருந்து வேறானவர்கள்.

### 11. வச்சணந்திமாலை

குணவீர பண்டிதர் இந்நூலின் ஆசிரியராவார். வச்சணந்தி என்பது குணவீர பண்டிதரின் ஆசிரியர் பெயர். வெண்பாப் பாட்டியல் என்னும் பெயரும் இந்நூலுக்கு வழங்குகிறது. பாட்டியல் மரபை-இலக்கணத்தை வெண்பாக்களில் அமைத்துக் கூறுவதனால் இந்நூலுக்கு இப்பெயர் ஏற்பட்டது. மூன்றாம் குலோத்துங்க மன்னனின் காலத்தில் இந்நூல் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்நூல் இந்திர காளியத்தைப் பின் பற்றியது என்பர். இவை தவிர, நவநீதப்பாட்டியல், வரையறுத்த பாட்டியல் போன்ற பலநூல்கள் இலக்கிய வகைமைகளை விளக்க எழுந்துள்ளன.

### 12. நன்னூல்

பவணந்தி என்ற சமண முனிவர் நன்னூலை இயற்றி உள்ளார். இவர் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த அமராபரணன் சீயகங்கன் என்ற மைசூர்க் குறுநில மன்னன் முன்னிலையில் இந்நூலை அரங்கேற்றி யுள்ளார். எழுத்து, சொல் என்ற இரண்டிற்கு மட்டுமே இந்நூல் இலக்கணம் கூறுகிறது. தொல்காப்பியச் சூத்திரங்களைத் தழுவி இந்நூல் செல்கிறதென்றாலும், வைப்பு முறையில் பாணினியம் என்ற வட நூலையே பின்பற்றுகிறதெனலாம்.

> பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே.

என்ற பழம்பெரும் உண்மையை வெளியிட்ட பெருமை இவ்விலக்கண நூலையேச் சாரும். இந்நூலுக்கு முதன் முதல் உரை வகுத்தவர் மயிலை நாதர் என்னும் சமண முனிவராவார். இதற்கு ஒரு விருத்தியுரையைச் சங்கரநமச்சிவாயர் இயற்றியுள்ளார். இந்நூலுக்கு ஆறுமுகநாவலர் மிக எளிய இனிய காண்டிகை உரையொன்று எழுதியுள்ளார்.

Scanned by CamScanner

தமிழ் இலக்கண நூல்களில் தொல்காப்பியத்திற்கு அடுத்துச் சிறந்த இடத்தைப் பெற்றிருப்பது நன்னூலே. எழுத்ததிகாரத்தில் தமிழ் எழுத்துக் கள் பற்றியும் அவை வருமிடங்கள் பற்றியும் அவற்றின் பிறப்பு பற்றியும் தமிழ்ச் சொற்களின் ஆக்கம் பற்றியும் பலவகை சந்திகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. நன்னூலில் உள்ள பதவியல் வடமொழி இலக்கணத் தைப் பின்பற்றியதாகும்.

ஒரு சொல்லைப் பல கூறுகளாகப் பகுத்து அவற்றிற்குப் பகுதி, விகுதி என்று பெயர்கள் இட்டுக் கூறியிருப்பது அறிவியல் - மொழியியல் முறைப்படி அமைந்திருப்பதாகும்.

"பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை".

"முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்" என்னும் நூற்பாவில் இந்நிலையைக் காணலாம்.

எழுத்ததிகாரத்தில் இந்நூற்பா இருந்தாலும் சொல்லின் கருத்தையே வலியுறுத்துவதாக உள்ளது. எழுத்ததிகாரத்தில் கூறப்படும் புணர்ச்சி விதிகளை நன்கு விளக்கிக் கொள்வதற்கு இது பயன்படும் எனக் கருதியதால்தான் எழுத்ததிகாரத்தில் கூறினார் பவணந்தி. மேலும் பகுதிகள் எவையென்பன போன்ற பல செய்திகளையும் கூறுகின்றார். தொல்காப்பியர் காலம் பற்றிக் கூறும் போது, காலம் மூன்று எனக் கூறிவிட்டு, இடைநிலைகளைக் கூறாமல் நின்றார். நன்னூலார்,

தடற வொற் றின்னே யைம்பான் மூவிடத்
திறந்த காலந் தருந்தொழி டைநிலை

என இறந்த கால இடைநிலைகள் எவை என்று கூறிச் செல்வதும் குறிப்பிடத்தக்கனவாகும்.

சொல்லியல் கருத்துக்கள் பலவற்றைச் சொல்லதிகாரத்தில் காணலாம். தொல்காப்பியத்தைப் பின்பற்றி வேற்றுமை எட்டு எனக் கூறுவதும் அவற்றைக் குறிக்கும் உருபுகள் இன்னின்ன எனக்கூறுவதும் அவை காட்டும் பொருள்கள் என்ன எனக் கூறுவதும் வேற்றுமை மயக்கங்கள் பற்றிக் கூறுவதும் இவர் தொல்காப்பியத்தினை மிகவே பின்பற்றியுள்ளார் என்பதைக் காட்டும்.

Scanned by CamScanner

"முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும் - முன்னோரின்
வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் என்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்"

என்பதற்கேற்ப பவணந்தி ஏழு தொல்காப்பிய நூற்பாக்களைத் தம் நூலில் எடுத்தாண்டுள்ளார். தொல்காப்பியத்தில் காணப்படும் பல கருத்துக்கள் இந்நூலின்கண் காணப்படினும் தொல்காப்பியர் காணும் உள் நோக்குகளை (Insights) நன்னூலில் காண முடிவதில்லை என்பார் அகத்தியலிங்கம்.

Scanned by CamScanner